மகிழ்ச்சி

அ 4 ண சீர்திருத்த மாத இதழ் விஜய சித்திரை

நேயர்களின் புகைப்படப் போட்டி.



பரிசு பெற்ற படம்.

இராசகிரி மலையில்
இணைப்புப் பாதை.

போட்டோ: சி. சின்னப்பன்,
குமராபுரி - சென்னிமலை.



பிரசுரத் தேர்வு பெற்ற படம்.

பாபநாசம் நீர்த் தேக்கத்தின்
தோற்றம்.

போட்டோ: M. அருணாசலம்,
ஊர்மேலழகியான்.

உடைப் பஞ்சம்!
உணவுப் பஞ்சம்!!
இன்று விருதையில்
தண்ணீருக்கும் பஞ்சம்!!!

ஊரின் நடுவில் அமைந்துள்ள தெப்பம் வரண்டு, அதன் உள்ளே உள்ள கிணற்று நீருக்காக போட்டியிடும் ஆண், பெண் மக்களின் நெருக்கடி.

போட்டோ: நா. சதானந்தம்,
விருதுநகர்.



குறிப்பு:- புகைப்படப் போட்டிக்குப் படங்கள் அனுப்பினலே போதும். நெக்கட்டிவ் அனுப்ப வேண்டியதில்லை. படத்தின் விபரமும், படம் எடுத்தவர் விலாசமும் படத்தின் பின்னல் அவசியம் எழுதியனுப்ப வேண்டும். முதலிடம் பெறும் படத்திற்கு ரூபாய் ஒன்று பரிசு அளிக்கப்படும்.

விருதுநகர்

சென்ட்ரலில்

டி. ஆர். ராஜகுமாரி,
பி. எஸ். சரோஜா,
பண்டரிபாய்,
அங்கமுத்து,
டி. எஸ். பாலையா,
சாரங்கபாணி,
ஸ்ரீராம், துரைசாமி
முதலியோர் நடித்த

ஆர். ஆர். பிக்சர்ஸ்

வாழப் பிறந்தவள்

டைரக்ஷன்: ராமண்ணா

12—4—53
ஞாயிறு முதல்
நடைபெறுகிறது

மகிழ்ச்சி

சீர்திருத்த மாத இதழ்

ஆசிரியர்: நா. சதானந்தம்
விருதுநகர்.

தி. ஆ. 1984—சித்திரை 1.
ஆண்டு 4]13-4-53[மாதம் 11

பொருளடக்கம்

உளர்வாயர்கள்!	3
உங்களுக்குத் தெரியுமா?	5
அட்டைப்படம்	7
அறிவுப் பூங்கா	8
முள்—தொடர் கதை	9
காமராசர்—அண்ணாதுரை கட்டுரைப் போட்டி 6	14
அழகு மயக்கம்	17
மதிப்பு	25
படித்தவள்	27
வெட்டடா (கவிதை)	34
அவள் அபலை	35
புனைப்பெயர்	39
ஆசை	40
இதுநிஜமா?	41
தெறித்த முத்துக்கள்	43
மகிழ்ச்சிக்கு எனது யோசனை கார்டு போட்டி 6	46
குமாஸ்தா—பட விமர்சனம்	49
ஞா. சோ. போட்டி 13	51
சந்தேகம் ஒழிக!	53

கதைகளில் வரும் பெயர்களும்,
சம்பவங்களும் கற்பனையே.

விருதுநகர் ஸ்ரீ ராதாவில்

நாகையா, ஜெயம்மா, பண்டரிபாய்,
நரசிம்மபாரதி, மனோஹர் திறம்பட நடித்த

குமாஸ்தா

இப்பொழுது 4வது வாரமாக
வெற்றியுடன் நடைபெறுகிறது!

லைன், கலர், ஆப்டோன்

பிளாக்குகள்

சினிமா சிலைடுகள்
ரப்பர் ஸ்டாம்புகள்
செய்யுமிடம்

ராஜன் & கோ., சிவகாசி.

MADRAS

உளர்வாயர்கள்!

கன்னியாகுமரியிலிருந்து கல்கத்தாவிற்குப் போக விரும்புகிற பணம்படைத்த ஒருவர் "கால் நடையிலேயே போகப்போகிறேன்" என்று துரிதமாகப் போகும் கார், இரயில், விமானம் போன்ற வசதிகள் நிறைந்த இக்காலத்தில், பழைய பொதி மாட்டுப் பிரயாணத்தை நினைத்துக்கொண்டு கூறுவாரானால் அவர்பற்றி பகுத்தறிவுகொண்ட மக்கள் என்ன நினைப்பார்கள்? ஒருசமயம் அவர்மூளையில் கோளாறு இருக்கலாம் என்று கூசாமல் கூறத் தோன்றுமல்லவா?

உலகில் எங்கு நோக்கினும் விஞ்ஞானம் பெருகிக்கொண்டு இருக்கும் இவ் விஞ்ஞான காலத்தில் ஒருவர் பிற்போக்கில், அதிலும் அடிபாதாளத்தை நாடுவாரானால் அவர்பற்றி பின் எப்படித்தான் எண்ணுவது, கூறுவது?

புருஷன் இறந்தால், மனைவி 'உடன்கட்டை ஏறுதல்' (சககமனம் —சதி) என்ற உயிருடன் கொளுத்தும் காட்டுமிராண்டித்தனத்தை 1829ம் ஆண்டில், இந்திய கவர்னர் ஜெனரலாக இருந்த லார்டு பெண்டிங்பிரபு, ராஜாராம் மோஹன்ராயின் பெரும் ஒத்துழைப்புடன் சட்டம் இயற்றி ஒழித்து, மக்களிடம் மனிதத் தன்மையை உண்டாக்கினர். பெண்ணினம் பெருமைப்பட்டது.

அதன் மறுமலர்ச்சியாக நாட்டில் விதவா விவாகங்கள் தாராளமாக நடைபெறத் தொடங்கி இருக்கும் இந்நாளில், ஹிந்து ராஜ்யக் கட்சியின் பொதுக் காரியதரிசி திரு. எல். ஜி. தாட்டே 6—4—53ல் பம்பாயில் கூறியதைக் கேளுங்கள்.

"கணவர் இறந்தவுடன் உடன்கட்டை ஏறும் உரிமையை இந்துப் பெண்களுக்குத் திரும்பப் பெற்றுக்கொடுக்க நான் போராடப் போகிறேன். அத்துடன் மனைவி இறக்கும்போது கணவர்களும் உடன்கட்டை ஏறும் உரிமைக்காகவும் போராடுவேன்"

நடக்குமா இவர் கூற்று? இவர் கூற்றை ஏற்க எந்தப் பைத்தியக்கார ஆடவனாவது, பெண்ணாவது முன்வருவார்களா இக்காலத்தில்? இப்படிப்பட்ட சட்டவிரோத உளர்வாயர்களை, அரசினர் உடன் தக்க நடவடிக்கை எடுத்துக் கட்டுப்படுத்துவார்களாக.

விளம்பரங்களைச்
சிறந்த முறையில் செவ்வனே செய்வதற்கு
"தமிழன் பப்ளிஸிட்டி பியூரோ"
முத்தூரணி மேல்கரை—காரைக்குடி

N. B:— இந்த வருடம் ராமனுதபுரம் பிஸ்னஸ் டைரக்டரி சித்திரைமீ வெளியிடுகிறேம். அதற்கு தங்களது விளம்பரங்களைத் தந்து உதவுமாறு கேட்டுக் கொள்ளுகிறேம்.

Prop: வ. வள்ளியப்பன்

பக்தர்களை ரட்சிக்க பவனி புறப்பட்டிருக்கும்
"பராசக்தி"க்கு பாத காணிக்கை செலுத்தினீர்களா?
அன்பர்கள் உள்ளத்தையே ஆட்டிப் படைக்கும்

நேஷனல் பிக்சர்ஸ்

பராசக்தி

விருதுநகர் நியூ முத்துவில்
— இப்பொழுது —
வெற்றிகரமாக நடைபெறுகிறது!

உங்களுக்குத் தெரியுமா?

10000 பேர் பலி!

தூக்கம் வரும் மாத்திரைகளை உபயோகிப்பதால் வருடத்தில் சுமார் 10000 பேர் மரணமடைவதாக யு. எஸ். வைத்திய சங்கத்தைச் சேர்ந்த டாக்டர் குக்லோ கூறுகிறார்.

பூட்ஸும் புட்பாலும்!

வெறுங் காலுடன், அதாவது பூட்ஸ் அணியாமல் புட்பால் (கால்பந்து) ஆடும்பழக்கம் 1955 முதல் இந்தியாவில் தடைசெய்யப்படுமென்று, மைசூரில் நடைபெற்ற அகில இந்திய புட்பால் சம்மேளனத்தின் வருஷாந்திரக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதிர்ஷ்டக்குழந்தைகள்!

பிரிட்டிஷ் ராணி எலிஸபெத்தின் முடிசூட்டு விழாவன்று மலேயாவில்பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் 10 டாலர் வீதம் பரிசு கொடுப்பது என பெராக் ராஜ்ய முடிசூட்டுவிழா கமிட்டி தீர்மானித்துள்ளதுஎன்றும், இந்தத் தொகை குழந்தைகள் பிறக்கும் பிரதேசங்களில்உள்ள தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங்குகளில் போட்டு வைக்கப்படும் என்றும் கோலாலம்பூர்செய்தி கூறுகிறது.

கல்விக்கு 8 கோடி!

5 வருடத் திட்டத்தின்கீழ் சென்னை ராஜ்யத்திற்கு கல்விக்காக 8 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இவை பிரைமரி ஆதாரக்கல்விக்கு 5 கோடியும், சர்வ கலாசாலைக்கு 1 கோடியும், தொழில் கல்விக்கு 1 கோடியும், சமூகக் கல்விக்கு 50 லக்ஷமும், அங்கஹீனமான குழந்தைகள் கல்விக்கு 50 லக்ஷமும் ஒதுக்கப்பட்டுள்ளது

பத்திரிகை படிப்பவர்கள்!

ஆசியாவிலேயே இந்தியாவில் தான் அதிக தினசரிகள் பிரசுரமாகின்றன. 1951ல் 578 தினசரிகள் 30லக்ஷம்பிரதிகள் வெளியிட்டன. ஆனால் 1000 பேர் 7 பிரதிகளே வாங்குகின்றனர்!

ஜப்பானுக்கு 2வது ஸ்தானம் அங்கு 186 தினசரிகள் வெளியாகின்றன. ஆனால் பத்திரிகை படிப்பதில் உலகிலேயே அவர்களுக்கு முதல் ஸ்தானம். 1000 பேர் 358 பிரதிகள் வாங்குகின்றனர்.

அமெரிக்காவில் 17,773 தினசரிகள் சுமார் ஐந்தரை கோடி பிரதிகள் வெளியிடுகின்றன. உலகிலேயே இதுதான் அதிகம்.

ஆனல் 1000 பேர் 356 பிரதிகள்தான் வாங்குகின்றனர்.

(ஐ. நா. புள்ளிவிவரங்கள்)

உலகில் இந்தியாவுக்கு 2வது இடம்!

செய்திப் படங்கள் தயாரிப்பதில் உலகில் 2வது ஸ்தானம் வகிக்கிறது இந்தியா. அமெரிக்காவுக்குத்தான் முதல் ஸ்தானம். (படத் தொழிலிலேயே அமெரிக்காவுக்குப் பின் இந்தியா 2வது ஸ்தானம் வகிப்பது நினைவிருக்கும்) 1950ல் இந்தியாவில் 241 செய்திப் படங்கள் தயாராயின. அமெரிக்காவில்395ம் ஜப்பானில் 215ம் தயாரிக்கப்பட்டன.

ஆசியாவில்இந்தியாவுக்கு 2வது இடம்!

ரேடியோக்கள், ஒலிபரப்பிகள் விஷயத்தில் ஆசிய நாடுகளில் ஜப்பானுக்கு முதல் ஸ்தானம். அடுத்தபடி இந்தியா. 1952ல் ஜப்பானில் 92 லக்ஷம் ரேடியோக்களும், இந்தியாவில் $6\frac{1}{2}$ லக்ஷமும் இருந்தன. 1932ல் ஜப்பானில் 21 ஒலிபரப்பிகளும், 1950ல் 81ம் இருந்தன. இந்தியாவில் 1932ல் நாலே ஒலிபரப்பிகள் இருந்தன. 1950ல் 25 ஆக இது உயர்ந்தது (தற்போது இன்னும் அதிகம்.)

தேர்தல் தகராறுகள்!

கடந்த பொதுத் தேர்தல்கள் சம்பந்தமாய் வந்த தேர்தல் மனுக்களை விசாரிக்க 63 டிரிபியூனல்கள் ஏற்படுத்தப்பட்டன. மொத்தம் வந்த மனுக்கள் 314. இதுவரை பைசல் செய்யப்பட்டவை 122. மீதி 192 விசாரணையில் இருக்கிறது.

6000 பெண்கள் கல்லூரிகளில்!

நமது சென்னை ராஜ்ஜியத்திலுள்ள தொழில் கல்லூரிகள், கலைக் கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை 100. இவைகளில் மொத்தம் பயிலும் மாணவர்கள் 50 ஆயிரம். இவர்களில் 6000 பேர் பெண்கள். பெண்களில் 5000 பேர் கல்லூரிகளில் படிக்கிறார்கள். 1000 பேர் ஆண்களுடன் சேர்ந்து ஆடவர் கல்லூரிகளில் படிக்கிறார்கள்.

தொழில் கல்லூரிகளில், வைத்தியக்கல்லூரிகளில்தான் அதிகம் பேர் படிக்கிறார்கள். அங்கு 800பேர் படிக்கிறார்கள். ஜூனியர் இண்டர்மீடியட் வகுப்பில் மட்டும் இவ்வாண்டு 16000 மாணவர்கள் படிக்கிறார்கள்.

மேற்கண்ட விபரம் மார்ச் 27ம் தேதி சென்னையில் நடைபெற்ற செனட்டர்சபைக் கூட்ட வருடாந்திர ரிப்போர்ட்டில் கண்டுள்ளது.

மேலும் மின்சார வெட்டு!

இப்பொழுது மின்சாரம் உபயோகத்தில் $66\frac{2}{3}$% வெட்டப்பட்டுள்ளது. 16—4—53 முதல் 75 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

குமாரி கமலா

தமிழ்ப் புத்தாண்டின் முதல்நாளில் (விஜய ஆண்டு சித்திரை முதல்நாள்) மலரும் இம்மாத மகிழ்ச்சியின் முகப்பு அட்டையில் முகமலர்ச்சியுடன் பரிமளித்துக் காட்சி கொடுப்பவர் கலைச்செல்வி, குமாரி கமலாவாகும். இன்று தமிழ் நாட்டில், நடன, நாட்டியக் கலைக்காகவே தன்னை அர்ப்பணித்துக்கொண்ட ஒரு நங்கை உண்டென்றால், அது கமலாதான் என்று கூறுவது மிகையாகாது. அற்புதமான ஆட்டம், அழகான முகபாவங்கள், அதிசயிக்கத் தக்க அங்கநெளிவுகள் முதலியன கொண்ட துடிதுடிப்பான—ஜீவன் நிறைந்த சிங்கார நடனங்கள் இவரிடம்போல் வேறு யாரிடமும் காண்பது அரிது.

இவ்வளவிற்கும் மிகவும் குறைந்த வயதுதான். இவர் மாயவரத்தில் 9—6—1934ல் பிறந்தவராவார். பேபி கமலாவின் குடும்பம் பம்பாயில் இருந்தபோது பிரபல ஹிந்தி படமான 'கிஸ்மத்' படத்தில் ஒரு நடனம் ஆட சந்தர்ப்பம் கிடைத்தது. அதில் இவர் ஆடிய ஆட்டம் அனைவரையும் பிரமிக்கச் செய்ததுடன், பிரபல நடன ராணியாகத் திகழவும் சந்தர்ப்பம் வகுத்துக்கொடுத்தது. பின் சென்னையில்வந்து குடியேறி, வழுவூர் திரு. ராமையா அவர்களிடம் தெளிவான நடனம் பயின்று, ஜகதலப்பிரதாபன், ஸ்ரீவள்ளி முதலிய படங்களில் தோன்றியிருந்தாலும், A.V.M.ன் நாம் இருவரில் இவர் ஆடிய ஆட்டங்கள்தான் ரஸிகர்களின் மனத்திரையில் என்றும் மங்கா அஜந்தா சித்திரம் போன்று நிலைத்து விட்டது எனலாம். அதன்பின் தொடர்வாக பல படங்களில் பற்பல அற்புத நடனங்கள் ஆடியுள்ளார்.

28-3-53ல் விருதுநகர் 7வது அகில இந்திய பொருட்காட்சியில் இவர் நிகழ்த்திய நடனங்கள் பிரமாதமாக மக்கள் மனதை ஈர்த்தன. ஆனாலும், வைரத்தையும், கருப்பு அல்லது புளூநிற வெல்வெட்டின்கீழ் வைத்துப் பார்த்தால், அதன்பூரிப்பே தனி என்றபடி சுவை நிறைந்த கீதங்களை இனிமையான குரலில் குளிர்மையாகப் பாடும் இசையாளர்களை பின்னணிக்கு வைத்துக்கொள்ளவேண்டும்.

நடன, நாட்டியக் கலைக் கோபுரத்தின் உச்சியில் நிற்கும் கமலாவிற்கு நமது வாழ்த்துக்களையும், மகிழ்ச்சிக்கென வழங்கிய முகப்புப் படத்திற்காக நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஸ்டாலின் மரண கீதம்

இயற்றியவர்: மதுரைமன்னன்
செல்வம் பதிப்பகம், மதுரை.
பக்கங்கள் 24 :: விலை 3 அணா

மறைந்த ஸ்டாலினின், மாபெரும் செயல்கள் குறித்து தற்கால வர்ணமெட்டுக்களில் இயற்றப்பட்ட பல பாடல்கள் அடங்கியுள்ளன.

* * * *

பூசாரி மகள்

ஆசிரியர்:
சு. ச. இளம்பெருவழுதி
பக்கங்கள் 30—விலை 6 அணா

கண்டகண்ட பெண்களைச் சுற்றித்திரிந்த காமாந்தலோலன் கோயில் பூசாரியின் வளர்ப்பு மகள் பலவித இன்னல்களுக்கிடையே தான் காதலித்த காளையைக் கல்யாணம் செய்துகொள்ளுகிறாள். சம்பவங்கள் நன்கு பின்னப்பட்டுச் சுவையுடன் அமைந்துள்ளது கதை.

* * * *

பராசக்தி

சினிமாக்கதை முழுவசனம்
பக்கங்கள் 80 :: விலை 8 அணா
மேற்கண்ட இரு புத்தகங்கள்
கிடைக்குமிடம்:
ரதிப்பதிப்பகம், மதுரை.

* * * *

சகோதரன் (சிறுகதை)

ஆசிரியர்: நா. சுப்பிரமணியன்
பக்கங்கள் 8—விலை 1 அணா
நா. சுப்பிரமணியன், நடுத்தெரு,
அனுப்பானடி, மதுரை.

கட்டுரைப் போட்டி 7

பரிசு ரூபாய் 2

சினிமா

இன்றைய சினிமாக்களால் ஏற்படும் நன்மை தீமைகளையும், இன்னும் முன்னேற்றகரமான காரியங்களில் எப்படிப்புகுத்தலாம் என்பனவற்றையும் சுருக்கமாக 'மகிழ்ச்சி' இரண்டுபக்கங்களுள் அமையும்படி எழுதியனுப்புக.

மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்.

அருப்புக்கோட்டை
ஆறுமுகம் களிம்பு
REGD. No. 103710
எந்த ரணமாயிருந்தாலும் இதைத் துணியில் தடவி உபயோகித்தால் சீழ் ஜலத்தை வெளியேற்றி ஆற்றும்
அ. ராம. மு. ஆறுமுக பாண்டியனால் தயாரித்தது.



[கடந்த கதை: ஏழை ஜானகியைக் காதலித்த ராமன் கொழும்பில் ஏங்கிக்கொண்டிருக்க, வேறு கல்யாண ஏற்பாடு முடிந்துவிட்டதாக மாமா அறிவிக்க, அதைத் தடுத்து ஜானகியை எப்படியும் மணம் புரிய வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தியா வருகிறான். ஜானகிக்கு கல்யாணம் முடிந்து புருஷன் வீட்டுக்குச் சென்றுவிட்ட செய்தி அறிகிறான். பின்......]

7

ஜானகி

என் பாட்டி என்னை படுகுழியில் தள்ளிவிட்டாள். பெற்ற தாய் இருந்தால் இப்படி என் கல்யாணம் நடக்குமா? ஏதேதோ கனவு கண்டேன் எல்லாம் தகர்ந்துவிட்டது.

எல்லா வரனும் அமையாமல் இருந்தது. கடைசியில் இந்த வரன்......போயும் போயும் பட்டிக்காட்டு..... ஐய்யோ... அதை நினைக்கவே பயமாய் இருக்கிறது. இளம் பெண்ணின் உணர்ச்சி ஏனோ பாட்டிக்குத் தெரியாமல் போய்விட்டது.

என் பாட்டிதான் என்னசெய்வாள்? மோதிரம் மாட்டிச்சென்றாரே, மோகனரூபன் அவரைத்தான் சொல்லவேண்டும். நான் இங்குள்ள நிலையை விளக்கி எழுதிய கடிதத்தைக் கண்டாவது அவர் வந்திருக்கவேண்டாமா? ஒருவழி சொல்லியிருக்க வேண்டாமா? என்னைக்கட்டிக்கொள்ள நினைக்கிற ஆண்மகனுக்கு இல்லாத அக்கரை, எவன் தலையிலாவது என்னைக்கட்டி, கழித்துவிட நினைக்கிறபாட்டிக்கு இருக்குமா? இருந்திருந்தால் என்னை—என் வாழ்வைப் பாழ்படுத்துவாளா பாட்டி?

சொர்ணத்தைக் கட்டப்போகும் சொகுசுக்காரர் என்னை சொப்பனத்தில்கூட நினைக்க

மாட்டார். பணக்கார சொர்ணமும் ஏழை ஜானகியும் ஒன்று தானா? சொர்ணம் கட்டும் பட்டுச் சேலை ஏழை ஜானகியிடம் ஏது? நல்லவேளை நான் ராமரிடம் என் கற்பை இழக்கவில்லை. அதுவும் இழந்திருந்தால்...... இதற்குள் ஆற்றிலோ குளத்திலோ மிதந்திருப்பேன்.

எல்லா வகையிலும் என் நன்மையை விரும்புகின்ற பாட்டி, என் கல்யாணத்தை இப்படி மோசமாக ஏன் செய்தாளோ? ஒரு கூலிக்காரனுக்கு என்னைக் கட்டியிருந்தாலும் பொருத்தம் என்று நினைத்து மகிழ்ந்திருப்பேன். முள்காட்டிலே என்னை தூக்கிஎறிந்துவிட்டாள். எழுந்தாலும், உட்கார்ந்தாலும், நகர்ந்தாலும், நடந்தாலும் குத்துகிறது முள். இதை இன்னும் எத்தனை நாளைக்குத்தான் தாங்க வேண்டுமோ?

இந்தக்கல்யாணத்திற்கு உடன்படுவதைவிடச் செத்துவிடலாம் என்று நினைத்து அதற்குக்கூட முயற்சி செய்தேன். இதையறிந்த என் பாட்டி சதா கண் காணித்துக்கொண்டே இருந்தாள் இதுதவிர வேறு நான் என்ன செய்ய முடியும்? எல்லோரும் என்னைக் கைவிட்டார்கள். என் கல்யாணம் முடிந்தது.

ஏழையின் கல்யாணத்திற்கு ராமருடையமாமாகூட வந்திருந்தார். "உங்கள் ராமர் என்னை வஞ்சித்துவிட்டார். ராமர் கொடுத்த மோதிரம் பெட்டியில் இருக்கிறது. என்னை ஏற்றுக் கொள்ளும்படி ராமருக்கு எழுதுங்கள்" என்று சொல்ல நினைத்தாலும் முடியுமா? அப்படிச் சொல்லியிருந்தாலும்கூட மேள முழக்கத்தில் யார் காதிலும் என் கூச்சல் விழுந்திருக்காது.

தாலி கட்டிய கணவனோடு ஊருக்குப் புறப்பட்டேன், உயிரைப் பிரிந்து.

8

மாமா

ஜானகிக்கு கல்யாணம் நடந்துவிட்டதுஎன்று தோட்டக்காரன் சொன்னதும், மின்னலடித்தவன் போல் ஆகிவிட்டானும் ராமர்! இப்போது ஆளேஒருமாதிரியாக மாறிவிட்டான். அவன் கண்கள் அசைவற்று ஸ்தம்பித்து நின்றது போல் இருக்கின்றன. பெரும்பாலும் மௌனமாகவே இருக்கிறான். இவையெல்லாம் ஜானகி தனக்குக் கிடைக்கவில்லையே என்பதின்எதிரொலிதான். இது இன்னும் எத்தனை நாளைக்கு?

விரும்பியது கிடைக்காவிட்டால், அல்லது கொடுக்காவிட்டால் குழந்தைகள் அழுவதில்லையா? கோபமாக இருப்பதில்லையா? ராமரும்குழந்தைதானே? ஜானகி தனக்கு இல்லையே என்பதற்காக பாவம், கவலைப்படுகிறான். குழந்தை அழுகிறதென்பதற்காகக் கண்டதை எல்லாம்

வாங்கிக்கொடுத்து அதை திருப்திப்படுத்துவது நல்லதா? பொருளின் குணவிசேஷம் குழந்தைகளுக்குத் தெரியுமா?

ஜானகியும் சொர்ணமும் ஒன்றுதானா? ஏழைக்கும் பணக்காரிக்கும் வித்தியாசம் இல்லையா? படியாதவளும் படித்தவளும் சரியான நிறைதானா? மாளிகையும் மண் குடிசையும் அடுத்தடுத்து இருந்தாலும் மாளிகையின் பார்வை—மதிப்பு குறைந்துவிடும். ஏழைப் பெண் பணக்கார வீட்டுக்கு வந்தால் ஏளனம் செய்ய மாட்டார்களா?

ஒன்றுக்காக அழுகிறகுழந்தை சற்று நேரத்திலே அழுகையை நிறுத்திவிடும். அல்லது மற்றொன்று கிடைத்தவுடனே கட்டாயம் அழுகையை நிறுத்திவிடும். ராமரும் அப்படித்தான். ஜானகிக்காக சிலநாள் வருந்துவான். அப்புறம் சொர்ணம் கிடைத்தவுடன் ஆனந்தப்படாமலா போவான்?

அந்தக் குட்டி ஜானகிக்கும் எவ்வளவு துணிச்சல்? ராமர் விலாசம் கேட்க வீடுதேடிவந்து விட்டாளே? நான்மட்டும் பார்க்காதிருந்தால் தோட்டக்கார கிழவன் ராமர் விலாசத்தைக் கொடுத்திருப்பான். ஜானகியும் ராமருக்கு கடிதம் எழுதியிருப்பாள். அவனும் வெறியில் என் அனுமதியின்றியே வந்திருப்பான். இந்நேரம் என்னென்ன நடந்திருக்குமோ?

நல்லவேளையாக நான் பார்த்துவிட்டேன். பொய் விலாசம் கொடுக்க ஏற்பாடுசெய்தேன். மறுநாளே அவள் பாட்டியைக் கூப்பிடவிட்டு விபரங்கூறி மிரட்டினேன். பணக்காரர்களைக்கண்டு ஏழைகள்பயப்படாமல்இருக்க முடியுமா? எனக்குப் பணிந்தாள். "ஜானகிக்கு உடனே கல்யாணஞ்செய்ய எனக்குஆசைதான். ஆனால் வரன் வேண்டாமா?" என்று கேட்டாள்.

பக்கத்திலே உள்ள ஒரு பட்

உலகிற் சிறந்தவை

1 உலகிலே அழகிற் சிறந்த நகரம் பாரிசு.

2 உலகிலே பெரும் பணம் படைத்த நகரம் நியூயார்க்.

3 உலகிலே அழகிற் சிறந்த கட்டிடம் தாசு மகால்.

4 உலகிலே வனப்பிற் சிறந்த இயற்கைத் துறைமுகம் ரியோ டி ஜெனிரோ.

5 உலகிலே அழகிற் சிறந்த செயற்கைத் துறைமுகம் சிட்னி.

6 உலகிலே மிகச் சிறந்த கோடைத்தலம் சுவிட்சர்லாந்து நாடு.

7 கிரிக்கெட் விளையாட்டில் தலைசிறந்து விளங்குவது ஆஸ்திரேலியா.

8 உலகிலேயேசிறந்த ஹாக்கி விளையாட்டுக்காரர் பல்வீர்சிங்.

9 உலகிலே சிறந்த அறநூல் திருக்குறள்தான்.

—தமிழ்நாடு

டிக்காட்டு மாப்பிள்ளையை நான் தான்சுட்டிக்காட்டினேன். நான் கூட அவள் கல்யாணத்திற்கு ரூ. 200 இனுமாகக் கொடுத்தேன். இல்லாவிட்டால் அவள் கல்யாணம் நடக்காதுபோல்தெரிந்தது. அப்புறம் யாருக்கு நஷ்டம்? ராமர் அவளை கல்யாணம் செய்வேன் என்று பிடிவாதம் பிடித்தால்? இந்தக்காலத்து இளைஞர்களைத் தடுக்க முடியுமா?

ஜானகி எவ்வளவு அடம்பிடித்தாள் தெரியுமா? அவளை வளர்த்து ஆளாக்கிய பாட்டியைக்கூட எதிர்த்துப் பேசினுள். "நான் ராமரைத்தான் கல்யாணம் செய்வேன். இல்லாவிட்டால் செத்து விடுவேன்" என்று ஒரே குதியாய்க் குதித்தாள்.

இந்தக் காலப் பெண்களும் ஆண்களைப்போல வெட்க மானமின்றி பேச எப்படியோ கற்றுக் கொண்டுவிட்டார்கள். காதலனுக்குக் காதல் கடிதம் எழுதுவதும், காதலனைத் தேடிச் செல்வதும் இன்று சர்வ சாதாரணமாக நடக்கஆரம்பித்துவிட்டது. படியாத பெண்களுக்கு இவ்வளவு துணிச்சலைக் கொடுத்தது சினிமாதான். அதை ஒழிக்க வேண்டும் என்று சொல்லுகிறவர்கள் வாய்க்குச் சீனிதான் போடவேண்டும்.

கடைசி நேரம் வரைக்கும் ஜானகி சம்மதிக்கவே இல்லை. சொர்ணத்தை ராமருக்கு நான் நிச்சயப்படுத்திக் கொண்டதை அறிந்த பிறகே மௌனமாகத் தலையைக் கொடுத்தாள், மாலை போட. இந்த ரகசியம் ஜானகிக்கும் ராமருக்கும் தெரியவே தெரியாது.

ஜானகியை உள்ளூரில் கட்டிக் கொடுத்தாலும், கண்டநேரத்தில் ராமனுக்கும் பழையநினைவுவந்து கொண்டே இருக்கும் என்று தான், பட்டிக்காட்டு மாப்பிள்ளைக்கு இரண்டாந் தாரத்திற்கு ஏற்பாடு செய்தேன். ஜானகி பாட்டிக்கு அந்த வரன் பிடிக்கவில்லை என்பது உண்மைதான். இருந்தாலும் என்ன செய்வது? முதலாளி நான் சொல்லிவிட்டதால் தட்டக்கூடாது என்று சம்மதித்தாள்.

ஜானகிக்குக் கல்யாணம் ஆகிவிட்டதறிந்த ராமன், எத்தனை நாளைக்குதான் கவலைப்படுவான்? சொர்ணம் வந்ததும் அவளழகில் சொக்கிப்போக மாட்டானு? முதல் மனைவி செத்துவிட்டால் மனைவியை இழந்தவர்கள் உடன் கட்டை ஏறிவிடுகிறுர்களா? அல்லது அய்யோ போய்விட்டாளே என்று ஆயுசு பூராவும் அழுது கொண்டிருக்கிறுர்களா? இரண்டாம் மனைவி வந்தவுடனே இன்பமாகத்தானே இல்லறம் நடத்துகிறுர்கள்? அதைப்போல இன்று வருந்துகிற ராமன், நாளை மகிழத்தான் செய்வான்.

ராமனிடத்தில் நான்எதுவுமே சொல்லவில்லை. அவனும் ஜானகி

பற்றி என்னிடம் பிரஸ்தாபிக்க வில்லை அவள் இன்னொருவ னின் மனைவியான பின்பு யார் என்னதான் பேசமுடியும்?

"சொர்ணத்தைப் போய்ப் பாரப்பா! உனக்குப் பிடித்தால் அடுத்த மாதமே கல்யாணம் வைக்கலாம்" என்று ராமனிடம் சொன்னேன். "நான் பெண் ணைப் பார்க்க விரும்பவில்லை. இஷ்டப்படி கல்யாணத்தைநடத் துங்கள்" என்று சொன்னான்.

நான் தாமதப்படவில்லை. ராம னுக்கும் சொர்ணத்துக்கும் கல் யாணம் செய்ய நாள்குறித்தேன். அதே தினத்தில் ஜானகியின் பாட்டி இறந்தாள். என்ற செய் தியும் கேள்விப்பட்டேன்.

தன் பேத்தி ஜானகிக்கு என் பேச்சைக் கேட்டு துரோகம் செய்துவிட்டதாக, சாகும்போது கூறினாளாம். இந்தத் துக்கந் தான் அவளைக் கொன்றதாம். என்னால் ஒரு உயிர் போய்விட் டது என்பதை நினைக்கும்போது எனக்கு ஒருமாதிரியாகத்தான் இருந்தது.

இதோடு ராமர் வருத்தப்படு வதையும்பார்க்க என்னால் முடிய வில்லை. என்னையும் கவலை வாட் டியது. டாக்டர் ஓய்வு எடுக்க வேண்டும் என்றார். கல்யாணத் திற்கு நாள் நிச்சயித்தபிறகு ஒய் வெடுக்க முடியுமா? கஷ்டப் பட்டு கல்யாணத்தைமுடித்தேன்

(தொடரும்)

காதல் படும்பாடு!

ஆமதாபாத்தில், ரிடயரான நகர மாஜிஸ்டிரேட்டின் (முஸ் லீம்) புதல்வியும், விவாகமாகி மூன்று குழந்தைகளுக்குத் தந் தையாகியுள்ள ஒரு சலவைத் தொழிலாளியும் (ஹிந்து) ஒரு வரையொருவர் காதலித்து வந்த னர். ஒருநாள் திடீரென இரு வரும் ஊரைவிட்டு விமானத்தில் பம்பாயை அடைந்து, அங்கிருந் து சென்னைக்குப் பயணமாகிவிட் டனர். போலீஸில் புகார் செய் யப்பட்டதின் பேரில், அவர்கள் இருவரும் சென்னையில் கண்டு பிடிக்கப்பட்டு போலீஸ் பாது காப்புடன் ரயிலில் ஆமதாபாத் திற்கு அழைத்துச் செல்லப்பட் டார்கள். லொனுவ்வா, காந்தலா ஸ்டேஷன்களுக்கிடையே டிரெ யின் போய்க்கொண்டிருக்கும் போது இரு காதலர்களும் விஷ முண்டு தற்கொலை செய்து கொண்டிருக்க வேண்டுமென்று, இறந்தவர்களின் ஒருவர் ஜேபி லிருந்து கண்டுபிடிக்கப்பட்ட விஷப் புட்டியிலிருந்து தெரிய வந்தது.

இந்தச் சம்பவம் ஆமதாபாத் தில் பெரும் பரபரப்பை உண்டு பண்ணியுள்ளது என்று மார்ச் 25உ பத்திரிகைச் செய்தி கூறு கிறது.

2 JUL 1955

வேது போட்டி பரிசுக் கட்டுரை

★ காமராசர்-அண்ணாதுரை ★

ப. சு. தி. அரசு, 61, ஆண்டார் வீதி—திருச்சி

தமிழக அரசியல் அரங்கத்தின் இரு துருவங்கள், கொள்கைக் கோலின் இருதுருவங்கள், செல்லும் சாலையின் இரு துருவங்கள்—இப்படித்தான் எண்ணுகிறார்கள் பலர் அண்ணாதுரை—காமராசர் என்றதும்.

அண்ணாதுரை—காமராசர்! ஆம், ஆச்சரியம் தரத்தக்க இணைப்புத்தான்! ஆனால் அவசியமானபயன்தரத்தக்கஇணைப்பு என்பதை யார் மறுப்பார்கள். அண்ணாதுரை — காமராசர் இணைப்பா? முடியக்கூடியதா? நடக்குமா இது என்று கேலி செய்ய எண்ணுபவர்கள்கூடச் சிறிது சிந்தனைக்கு வேலைகொடுத்தால் நிச்சயம் தேவை, தேவை இரு துருவங்களின் இணைப்புத் தேவை என்று கூறிடுவர். ஏன்? மின் சக்தி இயங்க வேண்டுமானால் இரு துருவங்கள் ஒன்றாக இணைதல் வேண்டும்.

அண்ணாதுரை—காமராசர் கொண்ட கொள்கையில், செல்லும் பாதையில், சிந்தனைப்போக்கிலே வேறுபட்டு இருக்கலாம். இன்றைய உலகத்தை நோக்கும்போது நமது சமுதாயக் கொள்கைகள், சமுதாயத்தின் நிலைமை மிகமிகப் பின்னணியில் உள்ளது; வாழ்ந்தவர் வீழ்ந்துவிட்டனர்; வீரன் கோழையானான்; விவேகி வீணன் ஆனான்; ஆண்ட இனம் மீண்டும் ஆளவேண்டும்; வாழ்ந்தவர் வீழ்த்தப்படக் கூடாது; பார்ப்பார் அற்றுக் கிடக்கும் பளிங்கு மண்டபமாக, செப்பம் செய்யப்படாத சிலையாக, புழுதியிலே கிடக்கும் வீணையாக இருக்கக்கூடாது நமது தமிழகம் என்று ஒருவர் நாட்டின் நிலை

மையை ஏட்டிலே தீட்டிக் காட்டலாம்.

நமது இனத்தார்க்குள் ஒற்றுமையுணர்ச்சிஇல்லை, தலைமைப் பதவிகள்நம்மிடத்தாரிடம்இல்லை, வாய்ச்சொல் வீரர்கள் தமிழர்கள் என்று பிறர் எண்ணிவிடக் கூடாது, நாம் தேசியப் பற்றுடன் ஒற்றுமையாக வாழவேண்டும் என்று மற்றவர் கூறலாம் இந்த இருவர் கூற்றிலேயும் பொதிந்து கிடக்கும் உண்மை தமிழன் வாழ வேண்டும், தமிழகம் உயர வேண்டும் என்பது தான். ஒருவர் தேசியத் தீரர். மற்றவர் சுயமரியாதைத் தோழர் தேசியத்திற்கும் சுயமரியாதைக்கும் என்றும் சண்டை கிடையாது. ஒவ்வொருவனும் சுயமரியாதையுடனும் தேசிய உணர்ச்சியுடனுமவாழ்ந்தால்தான் அவனை மனிதன் என்று உலகம் ஒப்புக் கொள்ளும்.

காமராசர் தமிழகத்திலே-ஏன் டெல்லியிலே நேருவால்கூட சிறிது நிதானித்து எண்ணிப் பார்க்க வேண்டிய அளவிற்கு செல்வாக்குப் பெற்ற பெயர்! காமராசர்—காங்கிரஸ் கோட்டையிலே நிரந்தரமாக ஏற்றிவைக்கப்பட்ட ஒளி விளக்கு! காமராசர்—தமிழரை ஏய்த்துப் பிழைக்கும் ஒரு கூட்டத்தார்க்கு ஏமாற்றத்தைக் கொடுக்கும் பெயர்கூட!

காமராசரின், சேவையை காங்கிரசால் மறக்கமுடியாது. காமராசர் இல்லையென்றால் தமிழ் நாட்டில் காங்கிரஸைக் கண்டு பிடிப்பதே கடினமாய்ப் போயிருக்கும் என்று கூறுமளவிற்கு அவரின் தொண்டு பயன்பட்டிருக்கிறது. இன்று இந்த நாட்டிலே காங்கிரஸ் வாழ்கிறதென்றால் அது பஜகோவிந்தத்தாலோ அல்லது பகவான் கடாட்சத்தாலோ அல்ல "திருப்பரங்குன்றத் தீரரின்" அரிய உழைப்பினால் தான் என்று கூறவேண்டுமா?

அண்ணாதுரை! ஆம், இன்றைய தமிழகத் தம்பிகளுக்கு ஓர் அண்ணா இளைஞர்களின் இதயத்திலே என்றும் பிரகாசிக்கும் ஒளிநட்சத்திரம். அண்ணாவின் சேவை எடுத்துக் கூறித் தெரிந்துகொள்ளவேண்டிய அளவிலே இல்லை! சமுதாயச் சிற்பி பெரியாரின் பாதையிலே—அவரைப் பிரிந்திருந்தாலுங்கூட — பீடுநடை போடுபவர் அண்ணா பேச்சிலே, எழுத்திலே, மறுமலர்ச்சி கண்டவர் அண்ணா.

இலக்கிய உலகைக் கப்பியிருந்த இருள் அகல "தீ பரவட்டும்" மூலம் தீபஒளி காட்டியவர் அண்ணா. அண்ணாவின் 'ஆரிய மாயை' அவர்களுக்கு எச்சரிக்கை, நம்மவர்க்கு ஒரு பாடம்! 'குமரிக் கோட்டம்' குமரேசன் பெயரைக் கூறி கும்மாளம் போடும் கூட்டத்தார்க்குச் சாவு மணி. 'ரங்கோன் ராதா' மூடப் பழக்க வழக்கத்திற்கு சவுக்கடி.

உலகம் உல்லாசபுரியினர்வாழ்வதற்கு மட்டுமில்லை. உழைத்து உழைத்து உருக்குலையும் பாட்டாளியும் வாழ்வதற்காகத்தான் இருக்கிறது என்று பேச்சிலே, எழுத்திலே, நாடகத்திலே, சினிமாவிலே மட்டுமல்ல சீரியமுறையிலே செயலாற்றி வருபவர்தான் அண்ணாதுரை!

காமராசர்—அண்ணாதுரை! ஏற்படுமா இந்த இணைப்பு? ★

கவிஞருக்குக் கழுதை ஊர்வலம்! மதவெறியரின் செயல்!

75 வயதையடைந்த பிரபல உருதுக் கவிஞர் திரு. யாகன சங்கேசி என்பவர், மதவிரோதப் பாடல்கள் எழுதிவந்தார் என்பதற்காக லக்ஷ்மணபுரியில் சில மதவெறியர்கள் அவரைக் கழுதைமேல் ஏற்றி கரிபூசி செருப்பு மாலைபோட்டு நகரில் ஊர்வலமாக மார்ச் 31உ இட்டுச் சென்றார்களாம்.

ரஷ்யப் பெண்ணின் சாகஸம்!

கிராஸ் நோடார் பிரதேசத்தில் அன்னராகோவய்யா என்றுஅழைக்கப்படும் வசீகரமான ரஷ்யப் பெண் ஒருத்தி நீதி இலாகா உதவி டைரக்டர் காரியாலயத்திற்குள் சென்று அவர் அறையின் கதவைத் தட்டி நம்பும்படி செய்து தனக்கு ஒரு வேலை கொடுக்கும்படி கேட்டாள். 3 தினங்கள் கழித்து சில முக்கிய தஸ்தாவேஜுகளுடன் மறைந்துவிட்டாள். பின் செஞ்சிலுவைச் சங்கக் காரியாலயத்திற்குச் சென்று டைப்பிஸ்டாகவும் காஷியராகவும் அவள் வேலையில் அமர்ந்தாள். இங்கிருந்து பணப்பெட்டியுடனும் டைப்ரைட்டருடனும் மறைந்துவிட்டாள்.

சிறிது காலம் சென்றபின் அவள் பிரதம நீதிபதியை வசீகரித்து கோர்ட்டில் கிளார்க்காக வேலை பார்க்கத் தொடங்கினாள். இங்கு போலீஸ் அதிகாரிகளிடமிருந்து செல்வாக்கைப் பயன்படுத்தி பாஸ்போர்ட் பெற்றுக்கொண்டாள்.

சில நமூனுக்களைத்திருடி கள்ளக் கையெழுத்திட்டு பலகைதிகளையும் விடுதலை செய்துவிட்டாள்.

அதன் பின் ஆயிரக்கணக்கான மைல் தூரம் பிரயாணம்செய்து சப்பரோலி என்னுமிடத்தில் தொழிற் சங்கக் காரியதரிசியாக அமர்ந்து 5000ரூபில் (ரஷ்யநாணயம்) நாணயங்களுடன் மாயமாக மறைந்தாள்.

அதன்பிறகு லட்வியாவில் அவள் கைதுசெய்யப்பட்டாள். அவள்மீது வழக்கு நடைபெறுமென்றும் விழிப்புடன் நடந்துகொள்ளாததற்காக அதிகாரிகளும் ஜவாப் சொல்ல வேண்டியிருக்குமென்றும் "பிராவ்டா" பத்திரிகை கூறுகிறது.

[உலகின் புற அழகு கண்டு பூரித்து நிற்பவர்கள் இச்சிறுகதையின் அக அழகு கண்டு சிந்திப்பர் சித்தார்த்தனைப்போல். ஆ-ர்]

அழகு மயக்கம்!

[புதுமைலோலன்—இலங்கை]

போதி மரத்தடியில் சித்தார்த்தன் உட்கார்ந்திருந்தான். உளம் ஓடியது; வேகமாக ஓடியது. உண்மை காணும் அவாவுடன் ஓடியது.

அரசபோகம் துறந்து, அருமை மனைவி யசோதராவைப் பிரிந்து, தன் இன்பத்துக்காக முழு வாழ்வையும் தந்த தந்தை சுத்தோதனனைவிட்டுப் பிரிந்து, தன் நாட்டைத் துறந்து, தன் நாமம்கூற உற்பவித்த தன் மைந்தன் இராகுலனைவிட்டு விலகி மூன்ருண்டுகள் கடந்துவிட்டன.

காலமாற்றம், சித்தார்த்தன் உளத்தில் எத்தனையோ உண்மைகளை, வாழ்வுநேர்மைகளை, இயற்கையின் தன்மைகளைக் கற்பித்து இருந்தது. அதற்காக, உடலை உளத்துக்கேற்க அமைத்து, வாடியிருந்தான். அந்த வாட்டநேரத்திலும், அழகுடையில்லாதபோதிலும், அவன் அழகு சுடர்விட்டது. இராசகுமாரனுக்கு உரிய கம்பீர அழகு விட்டு விலகாது மின்னலிட்டது.

பிணி...மூப்பு...சாக்காடு... அவனுள்ளத்தில் சுழன்ற பிரச்சினைகள். உண்மைகாணும் அவா அழைக்க, காடுநோக்கிப் புறப்பட்டான். வனாந்தரம், மலைநாடு, அழகுநதி எல்லாம் வந்துவந்து போயது. கால் நடந்தது. கிடைத்ததை உண்டு, உளம் ஆராய்வு வீறிடப் போனான்; போனான்; போய்க்கொண்டேயிருந்தான். மூன்று ஆண்டுகளையும் இப்படிக்கடத்தினான். அற்புத உண்மைகள்—மனித வாழ்வின்மையம்—தேவை—மனிதன் செய்ய வேண்டியன......யாவும் அவன் அறிவில் திரண்டது; ஞானம் வந்தது.

அவனைப் பின்தொடர்ந்தனர், பல சிஷ்யர்கள். நாடுபல சுற்றிக் கடைசியாக, தன் சொந்த நாட்டுக்கு அருகில், சில மைல்கள் இடைத்தூரத்தில்உள்ளகாட்டில் இயற்கை சூழ, போதிமர நிழலில் உட்கார்ந்திருந்தான்.

இயற்கையின் ஆசிரியன், அழகின் கூட்டுப் பொருள், கதாசிரியனை கலைஞனை ஓவியனை ரசிகனைப் பைத்தியமாக்கி விளையாடும் அழகு மதி, ஆகாயத்தில் பவனி வந்தான். சிஷ்யர்கள்

யாவரும், தங்குமிடக்குடிசையை யடைந்தனர். சிலர் தூங்கினர்; சிலர் படித்தனர். ஆனால், சித்தார்த்தன் சிந்தனை வயப்பட, அரசமரத்தின் கீழ், மதியைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். தனிமையில் இப்படிவெத்தனை யோ இரவுகளைக் கடத்துவது அவனது வழக்கம்.

மதி பேசியது. இயற்கை கதை கூறியது. மனம் முன் ஓடியது.

மன அரங்கம் ஆடியது. அங்கே, இராகுலன் வந்தான்; பின் அவன் மறைய யசோதரா வந்தாள். ஆரம்பகால வாழ்விலே,காதல் உலக மனவிருப்பு இன்பத்திலே இனிமையைக்கூட்டாக்கி உண்டு கிரங்கிய அந்த மதிவேளைகள், உளமெல்லாம் உருண்டது.

அன்றொரு நாள்...! ஆரம்ப காலம். யசோவுடன் வாழ்க்கையைச் சித்தார்த்தன் ஆரம்பித்த காலம்.

மதி, வானச் சோலையில் அழகுப் பூவாகியிருக்கும் இராப் பொழுது. அரண்மனையுள்ளரே நிசப்தம். அதைக் கலைக்கும் முகமாக யாழ்ஒலி ஒன்று எழுந்துகொண்டிருந்தது. 'ஓடி வா! ஓடிவா!' என யாழ் ஒலி ஒலித்தது...! யாரையோ அழைத்தது அவ்வொலி. அதில் அவசரம், தேவை கிடந்தது.

நிலவு ஒளி வீசும் மேல்மாடியிலே, தங்க இழை பின்னிய அழகு மஞ்சத்திலே, மனமயக்கம் மனமெலாம் கொடுத்த போதையிலே, யசோதராவின் வெண்விரல் மீட்டிய யாழ் ஒலி தான் அது.

ஒரு அழகு யாழ், இன்னொரு அழகு யாழை மீட்டியது. யாழ் மீட்டிய யாழை, மீட்ட "சித்தார்த்தன்" ஓடோடி வந்தான். சித்தார்த்தன் வருதலைதயறியாது, யசோ யாழைமீட்டினாள். அந்த யாழ் ஒலியிலே தென்றல் வீசியது, சுகம் கிடந்தது, மென்மையிருந்தது, 'கலை' கட்டிப் புரண்டது.

சித்தார்த்தன் சிந்தையெலாம் 'யாழ்' ஒலி. அதைத்தொடர்ந்து 'யசோ' பிம்பம். மௌனமாகப் பின்னே நின்ற சித்தார்த்தன் கரம் யசோ கண்ணைப் பொத்த, யாழ்நாதம் படாரென நின்றது.

யசோ திரும்பினாள்—திகைக்க வில்லை. தன் உளம் தடவிய சித்தார்த்தன்தானே உடல்தடவ முடியும். பழகிய கரங்கள், அவள் வேண்டிய கரங்கள், அவள் இன்பக்கரங்கள்......ஸ்பரிச இன்பத்தில் இனிமை காட்டும் வலிமைக் கரங்களை அவள் அறிவாள்தானே!

அவள் திரும்பிப் பார்க்க, சித்தார்த்தன் அணைக்க, 'இன்பம்' நடனமிட, தங்களை மறந்தனர் அவர்கள்.

பின் விட்டகன்றாள்.

'ஊடல்' அவளுக்கு. சித்

தார்த்தன் நேரஞ் சென்றுவந்த ஒரே காரணந்தான்.

யன்னலூடே வானத்துச் சந்திரன் ஓடுவதை, அண்ணாந்து பார்த்தபடி நின்றுகொண்டிருந்தாள்.

யாழைச் சித்தார்த்தன் எடுத்தான்; மீட்ட ஆரம்பித்தான். சிருங்கார ரஸத்தை யாழ் மீட்டியது. இல்லை, சித்தார்த்தன் சிந்தையின் படப்பிடிப்பு அது. கொஞ்சநேரந்தான் இப்படி. எழுந்தான் சித்தார்த்தன்.

"யசோ...யசோ...ய...சோ!"

யசோ வாய்நாதம் எழவில்லை. மௌனம் சில நிமிடங்கள்.

யசோ மஞ்சத்தை அடைந்தாள். யாழைஎடுத்தாள். மீட்ட ஆரம்பித்தாள். ஆனால் கை சிறு நடுக்கம்கொண்டிருந்தது.

யாழ் மீட்டலைச் சித்தார்த்தன் தடுத்தான். மீட்டவிடவில்லை.

'ஏன்!' எனப் பார்த்தாள் பொய்க் கோபத்துடன்.

"நீயே ஒரு யாழ்—பின் ஏன் இந்தயாழ்?" இப்படிப் பேசியது சித்தார்த்தன் வாய்.

"அப்படியா, இந்தாருங்கள்—இதுதான் யசோதரா" என்றபடி அவனிடம் நீட்டினாள் யாழை, யசோதரா.

யாழை வாங்கப்போன சித்தார்த்தன், யாழைத்தொட்டான். 'டிங்' என ஒரு நாதமெழ யாழ் பக்கத்தே வைக்கப்பட்டது. யசோவின் அழகு கை அவன் கையுள் அமுங்கியது. குழைந்து கிடந்தது. யசோவின் முகத்தை நிமிர்த்தியபடி "ஏன் யசோ கோபம்?" என்றான்.

"உங்களால்தான்......" என ஆறுதலாகப் பேசினாள் யசோ.

"என்னாலா? எப்படி?"

"என்னைத் தனிமையில்விட்டு இத்தனை நிமிடங்களும் எங்கே போயிருந்தீர்கள்?"

"அட, அதுவா? உடனே உன் ஒலி கேட்டதும் ஓடோடி வந்துவிட்டேனே! யசோ, அதற்காகவா..."

'ம்' என்றாள் குழந்தையாகி.

பின்...ஊடலா? கூடல் குதூகலமிட்டது. அவன் நாதமெழுப்பினான், யசோவெனும் அழகு யாழில். அக் கீதஇசை உலகத்துக்குக் கேட்கவில்லை. இதயத்துக்குக் கேட்டது. அதுவும் இரண்டே இதயத்துக்குக் கேட்டது. இன்பம்பிறந்தது. வாழ்வு அருமை அங்கே உலாவியது.

இப்படியாகச் சில நிமிடமே பிரியாத, முடியாத காதல் சிட்டுகள்தான் யசோவும் சித்தார்த்தனும். நித்திரை செய்யும்போது கூட யசோ, சித்தார்த்தனின் அணைப்பிலேதான் கிடப்பாள். எப்போதும் இருவரும் ஒட்டியபடியே இருப்பர். கொஞ்சநேரம் பிரிந்துவிட்டால், யசோ உளம் புயலாகிவிடும்—சித்தார்த்தன் சிந்தை அலையாகிவிடும். ஓடிச் சேர்ந்துவிடுவர்.

யசோ சித்தார்த்தனின் உலகம். சித்தார்த்தன் யசோவின் இன்ப வையம். உலகமே ஒருஇன்பப் பூங்காவாகவே அவர்களுக்குத் தெரிந்தது. அன்பு அணைப்பு, தொடு இன்பம், முத்தமாரி, இதயச் சேர்வு—இப்படி ஓரே இன்ப விளையாட்டில் உலகம் மறந்து, உளம் மகிழவிருந்த சோடிகள் அவர்கள்.

ஆனல்...இதுவெல்லாம் அப்போது, கடந்த விடயம். இளமையைஇன்பமொன்றுக்குஇரையாக்கிய நேரம்.

ஆனல்......இப்போது, அதே யசோவை விட்டுப் பிரிந்து மூன்று ஆண்டுகளைக் கடத்திய, உறுதிஉளச் சித்தார்த்தன். சில நிமிடமே பிரியாத அவர்கள், மூன்று ஆண்டுகளைக் கடத்தி விட்டனர். இப்போதும் யசோ ஞாபகமுண்டு. ஆனல் அந்த ஞாபகத்தில் போதையில்லை. தேவை கிடையாது. ஆசை தளிர் விடுவதில்லை. அவளும், உலகத்திலுள்ள பெண்களில் ஒன்று—தசை, தோல் சேர்த்த ஒருபெண் எனத்தான் சித்தார்த்தனைப் பொறுத்தமட்டில் தோன்றியது.

அழகு மதி, முன், மயக்க 'மது' அவனுக்கு; போதை ஆசிரியன் சித்தார்த்தனுக்கு. அதே மதி இப்போதுஇயற்கையாசான். விடுகவி போன்ற பல பிரச்னை போக்கும் நல்ல குரு. பழைய இன்ப அலை உள்ளக் கடலில் மோதும்—வருத்தியதும் உண்டு ஆரம்ப காலப் பிரிவில். அதே இன்ப அலை அறிவு தருகிறது இப்போது. இயற்கையைக் கற்பிக்கிறது. மனசாஸ்திரம் போதிக்கிறது. அழகு மயக்கம், மனிதனை ஓரே அமுக்கில் தன்னுள்ளடக்கிவிடக்கூடிய ஒரு பூட்டு என அவனுக்குத் தெரிகிறது. அது அவன் மன முடிபு. முகமெலாம் மயிர்க்கற்றை, அகமெலாம் அறிவுக் கற்றை, தேகமெலாம் மெலிவுத் தோற்றம், தேவையெலாம் 'உலகம் வாழ' உண்மையைக் காணல். கண்டதை, அறிந்ததை, பிரத்தியட்சமாகக் காட்டியே புத்தன் பேசுவான். சித்தார்த்தன் புத்தன் ஆனபிறகு, எதையும்ஆலோசனையில் புடமிட்டு, ஆராய்ச்சியில் முடியிட்டு, தானே அதில் நடமாடிப், பின்புபேசுவான. காணுததைப் பேசான்—தெரியாததை மழுப்பான். கூற இயலாததைத் தொடான்! பின்னும் பின்னும் ஆராய்வான். 'பிருதிவி' அவனது ஆசான். 'அப்பு' அவனின் குரு. 'தேயு' அவனின் ஆசிரியன். 'வாயு' அவனின் உபாத்தியாயன். 'இயற்கை' அவன் ஆராய்வுக்கூடம். அங்குள்ள செயல்கள் அவனின் ஆராய்ச்சி விடயங்கள்.

க-ட-வு-ள்...கடந்த நிலையில் உள்ளோருக்குத் தோற்றியதாம். ஆனல், புத்தன் தேடினன், முயன்றன்,முடியவில்லை. இயற்

கையின் இயல்பு, 'கடவுள்' போதனை செய்தது.

ஒருவன் கூறியதை அப்படியே செவியேற்று, வெளியே அப்படியே உரைக்கும் பான்மையவனிடம் கிடையாத ஒன்று. ஆதலால், அவன் சிந்தனைவாதியானான், சிந்தனையின் ஒரு அவதாரமானான். உண்மையின் பிறப்பாளன் ஆனான்.

இந்தப் புத்தன் தனிமையில், சிந்தனைத் தோழனாகி உட்கார்ந்துள்ளான்.

மதி மேகத்தில் மறைந்து மறைந்து கண்ணாமூச்சி விளையாடினான். நேரம் ஓடிக்கொண்டிருந்தது.

நகர்ந்தது இரவு! புத்தன் போதி மரத்தின்கீழ் அப்படியே இருந்தான்.

* * * *

யாழ் கீதம் காட்டு அமைதியைக் குலைத்தது. சிருங்காரம் பரக்க, ஒலி நாதமாகிப்பறந்தது. சலசல, சல்சல் என்ற சதங்கை ஒலியும் கலீரிட்டது. சுகந்தம், வாசனை காற்றில்பரந்து, புத்தன் நாசியுள்ளும் புகுந்து சென்றது. ஆனால், அந்த ஒலியோ, சுகந்த மணமோ புத்தனை அணுகியது, அவனுக்குத் தெரியாது.

மனதை ஒன்றிலேயே பதித்து அதிலேயே முழுச்சக்தியையும், புலனையும், யாவும் செலுத்திச் சிந்திக்கும் ஆற்றல் கைவந்து விட்டது புத்தனிடம். ஐந்து அவா அறுக்கும் நிலையது. ஆதலால், பிணி—மூப்பு—சாக்காடு இம்மூன்றையும் திரட்டும் துயர் போக்க வழியைத் தேடினான்; சிந்தனையைப் பலகோணப்படுத்தி ஒரே விடயத்தை ஆராய்கின்றான். ஆதலால், ஒரேநேரிய, புலன் மாறா, மோன சிந்தனை. ஆதலால், வெளியுலகுமறந்தான், அகவுலகில் ஆழமாகப் போய்க்கொண்டிருந்தான், உண்மையை நாடி. அப்போதுதான் யாழ் ஒலி எழுப்ப, சதங்கைசப்தமிட, மூன்று 'அழகுகள்' வந்துகொண்டிருந்தன.

தண்ஹி, ரதி, ரங்கா என்ற மூன்று பெண்களும்தான் வந்தனர். நடனமாடியபடி, போதையேற்றியபடி வந்தனர். புத்தன் இருந்த போதிமர நிழலையடைந்தனர். மேலே அழகுசந்திரன்; காட்டிலே குளிர் தென்றல்; போதிமர நிழலில் மூவர். மூவரும் 'அழகு'ஓவிய சாதனங்கள். ஒருவரை ஒருவர் தாளாத, ஒப்புமையில்லாத அழகிகள்; ஆடம்பர மாதுகள்; ரசம்சூழ் செல்விகள். புத்தனைச் சூழ்ந்தனர்.

'தண்ஹி' வந்த மூவருள் மூத்தவள். ஆசையின் கூட்டு. ஆவலின் கிரட்சி. கண்டவர் மனம் பம்பரமாக ஏதுவாய அழகுப் பதுமை. புத்தலர்மேனி, இளமைக் குளிர்வு, அதர நெளிவு, போதை தரும் கோதை, காமக்கலை பயிற்றும் மேதை; ஆனந்த உலகு கூட்டும் பூவை; அவள் கண் ஒருகலைக்காட்சி மண்டபம்.

அங்குநடனமுண்டு, பாட்டுண்டு காவியமுண்டு, ஓவியமுண்டு, யாவுமேஉண்டு. அழகை அழகு செய்வதுபோல மென்மையுடை; உட லுடன் ஒட்டிய உடை. அழகை வெளிக்காட்டும் உடை. உடையுடுத்துள்ளாளா, இல்லையா என்பதைக் கண்டுகொள்ள முடியாத உடையால் மேனி சுற்றி, உளமெலாம் ஆசை சுற்ற, கண்ணெல்லாம் போதை சுற்ற நின்ருள். மார்பு படபடக்க, கை குழைந்து சாய, கால் நடனமிட்டது; நாட்டியம் தொடங்கியது, ‘சிருங்காரம்’ உடையாகி, உடலாகி, நாதமாகி, நாட்டியமாகிப் பரந்தது.

‘ரதி’கோபம்மிக்கவள். அவள் கோபம் கொள்ளும்போது உண்டாகும் அழகு உண்டே அது ஒப்பாரற்றது; மிக்காரற்றது; தனிநிகரானது. அழகி; கடைந்தெடுத்த அழகி, உலகை அழகு சேர்ந்தகூட்டு அவள். தண்ணீர் போன்று உடல்தெரியஉடையும்; உடல்‘லாவக’ நடையும், குழைந்துநோக்கும் போதை நயனமும் கட்டியம் கூற, நடனமாடிஞள். அறுபத்துநான்குகலையும் கட்டிப்புரண்டது.

‘ரங்கா’ உலகையாட்டும்உடல் தேவையரசி. காமத்தின் பிறப்பிடம். காமம் பயிலவேண்டியவர்கள் ரங்காவை நாடவேண்டும். அவள் உடல் நெளிவில் மது; உடல்அழகில் மது; கண்ணில், சுழல்வில், பார்வையில் மது; சிரிப்பில்மது; உடல்தோற்றமே மது; உறுப்புகளே மதுக்குடம். அவளே ஒரு‘மது’. வெறிதரும் பெண் அவள். போதைதரும் அரசியவள். ஆடிஞள், காமம்பரக்க ஆடிஞள், உளம் வீச ஆடிஞள், வெறி வட்டமிட ஆடிஞள்.

அவர்கள், ஆசையும் அழகும் காமமும் உருவாகி வந்த அழகு உருக்கள். கலைபயிற்றும் காவிய உறுப்புக்கள். அழகுமுடிபுகள். ஆடினர்; பலவகை நாட்டியம் ஆடினர், பாடினர், பலரசபாடல்களை யாழில்கீதமாக்கினர், தமது உடல் நெளிவில் உலகம் மறக்க ஆடினர், வெட்கம்விட்டு உறுப்புகள் வெளியாகித்தெரிய ஆடினர், பம்பரமாகச்சுழன்றனர், புத்தனை அழகு நாமமிட்டு அழைத்தனர். மதனு, மாமன்னு, அழகா, உயிரே, சித்தார்த்தா என்றெல்லாம் கூவினர். அவர்கள்செயல் எதுவுமே, புத்தன்உளத்தின் வாயிலையும் தட்டவில்லை.

அவனிடம், ஒருபுன்சிரிப்பு... அது அறிவுக் கடலில் எடுத்த ஞானச் சிரிப்பு புத்தன் உடல் அப்பெண்கள் முன்தான் உட்கார்ந்துஇருந்தது; கண் திறந்து கிடந்தது. ஆனால், உள்ளம், உணர்ச்சியங்கில்லை. அது மோன நிலையில் எங்கோ, அதிதூரத்தில் சிந்தனை ஒரே நேரிய பாதையை நாடக்கிடந்தது. அந்த மோனத்தை, பாட்டோ, நடனமோ, அழகோ, எதுவுமோ இவ்வுலகு கொணரமுடியவில்லை.

அப்பெண்கள் களைப்பால், நாடிவந்தமை முடியாததால் சாய்ந்தனர்; நித்திரையாகிவிட்டனர்; அதே இடத்தில்.

அம்மூவரும் 'வசவர்த்தி' என்னும் பெரிய பிரபுவின் மக்கள். 'வசவர்த்தி' சுத்தோதனனின் சிறந்த நண்பன், அரசியல் உதவியாளன். சுத்தோதனனின் கேள்விப்படி, சித்தார்த்தனை 'வசவர்த்தி' ஒருநாள்நாடிவந்தான். சாக்கிய குலப் பெருமையை, நெறியை, அரசபோகத்தை, தந்தைப்பாசத்தை எடுத்தெடுத்துக் கூறினான்—கெஞ்சிக் கேட்டான்; அரண்மனையை அடைந்துவிடுமாறு. ஆனால், சித்தார்த்தன் சிந்தையில் இவை தட்டிப்பார்க்கவும் முடியவில்லை. அதனால், வசவர்த்தி கோபத்துடன், வெட்கம்மீக்குற வீடடைந்தான்; குப்புறப்படுத்தான்.

எது கூறினாலும் யாருமே' அந்த நாட்டில், அவனைத் தடுத்துப் பேச முடியாது. ஆனால் 'இந்தப் பொடிப்பயல் சித்தார்த்தனை, முந்தாநாள் தோன்றிய சிறுவனை மறுப்பது. 'சாக்கிய' வம்சத்துக்கே ஒரு பெரிய கறை இவனால்' என மனம் ஆத்திரமாகப் பேசினான். படுத்தபடியே கிடந்தான். அவனது அன்புச் செல்விகள் ஆய தண்ஹி, ரதி, ரங்கா கண்டனர். தந்தைக்கு மகிழ்வுதரக் கங்கணம் கட்டினர். சித்தார்த்தனின் மன வைராக்கியத்தைக் குலைத்தேலுவது எனப் புறப்பட்டனர். ஆனால், அவர்களும்தோற்றனர். தோல்வியால், களைப்பால், அப்படியே அங்கேயே உறங்கிவிட்டனர். இன்னும் பலன் காணும் நோக்குடன்.

மோன தவத்திலே, முற்றும் துறந்து, கடவுளையடைய நாட் குறித்தபடியிருந்த கௌதமனை, 'மேனகா' குலத்தாள், கூடினாள், மகவும் பெற்றாள் புராணத்தில். ஆனால், புத்தன் சிந்தையை சிதறடிக்க—புத்தனைக்கௌதமனுக்க எத்தனை மேனகாக்களாலும் ஆகாது; இயலாது.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. விடியும்நேரம். இரவு ஓட, பகல் நாடும் அந்த நேரம். சித்தார்த்தன் உளம் சிறிது ஆறுதல்தேட நாடியது. எழுந்தான்; அங்கே மூன்று பெண்களும் நித்திரையாகிக் கிடந்தனர்.

அழகுஉடையுடன், சுத்தமாக சுகந்தமிடவந்த அவர்கள், அசுத்தமாக, அவலட்சணமாகப் படுத்துக் கிடந்தனர். நித்திரையில் அவர்கள் அழகை, சேலையின் குலைவு, கேசத்தின்ஒழுங்கின்மை கெடுத்தது. சாந்துப் பொட்டு கரைந்து காதெல்லாம் ஓடிக்கிடந்தது. கண்ணில் நீர்வடிந்து முகமெல்லாம்கறுத்துக்கிடந்தது வாயிலிருந்து நுரைபோல நீர் பரந்து நாற்றம் தந்தது.

இரவு 'அழகு'ப் புதையல்கள்; விடியும் நேரம் நாற்றப்பொருட்கள், அவலட்சண ரூபங்கள். அவலட்சணமெல்லாம் திரண்ட

பொருள்தான் அழகா? நாற்றம் எல்லாம் மறைக்கப்படுவதுதான் அழகா? அழியும் போலியழகு, தோல் உண்டாக்கிய சிறுதிமிட அழகு, பொய்யின் திரட்சிதான் அழகு. அழகு மயக்கம் ஒரு வெறி; மதுப்போதை; அங்கு உண்மை கிஞ்சித்துங்கிடையாது. பெண் ஒரு மது சாரம். குடித்தவன் வெறியன். கண்டவன் வெறியன். ஆம்! அங்கும் உண்மையுண்டு. உண்மையை அப்படியே தராது மறைப்பிடுவது மயக்கம். அந்தமயக்கம் பெண்ணிடம் வெறியுடன் கொடுக்கப்பட்டுள்ளது. அதுதான் அழகு.

அழகு; தோல்தரும் மறைப்பு; மாயைபோல. ஆனால், தோலை விட்டால்—என்? தோலினுள்ளே ஓசே நீண்ட கொடிகள்—குடல்கள்; நாறும் பல நீர்த் திராவகங்கள், எலும்புக் கோர்ப்புகள்; ஆனால், தோல்மூடி மறைப்பிட்டு 'அழகு' என ஏமாற்றுகிறது. அதுபோலத்தான், அழகுமயக்கமும், மனிதனின் சிந்தனையை மறைத்து வேறோர் 'வெறியை' ஊட்டி, வாழ்வைக் குழப்பிவிடுகிறது. சிந்தனை தடம் புரண்டு ஆழமாகப் போனால், 'அழகு' தான் உலகத்தின் குற்றத்தின் காரணம்... அழகுதான்பிணியின் ஆரம்ப கருத்தா.. அழகுதான் 'மூப்பு'த்தந்து வருத்தும்வைரி... அழகுதான் சாக்காடுகொணரும் காலன்... அது தான் 'பெண்'; பெண்ணிடமுள்ள அழகு போலி; மயக்கம்; இல்லாததைஇருப்பதாககம்பிய உருவெளித் தோற்றம்; இயற்கையின் விடுபடா விடுகவி!

ஐந்தவித்தானாற்றல் வரவேண்டின், உண்மைகாண வேண்டின், வையத்துள் வாழ்வாங்கு வாழவேண்டின், 'அழகு'மயக்கவஸ்துவாக இருத்தலாகாது. கலைஎனக் கூறியும் அழகு போதைதர ஏதுவாக அமையக்கூடாது. 'அழகு' ரசிக்கப்படவேண்டியதல்ல; ஆற்றல்தர ஏதுவாக வேண்டும், அன்பு உலகுதர ஏதுவாகவேண்டும். அங்கே வெறிமறையவேண்டும்—அப்படியானால்வாழ்வு வெற்றி பரவக் காணலாம். ஆதலால், அழகுமயக்கம் போதையாகாது அறிவு ஆசானாகவேண்டும்......!

அந்த அழகின் பெண்; அப்படி மாறவேண்டும். நாட்டுநிலை மாற்றியமைக்கவேண்டும். அவள் வெறி தரக்கூடாது—வாழ்வு வெற்றிதா வேண்டும் அவள் 'துயர்' தரவே கூடாது—துயர் அடைக்கும் அமுதாகவேண்டும். அப்படியானால், 'ஒழுக்கம்' நாடெலாம் பரவும்......!

இப்படியாகப் 'புத்தன்' உளம் சிந்தனையிட்டது. முடிவு......! அட்டசீலங்களில் ஒரு சீலம் வெளியாயது. அடக்கத்தால், அழகுமயக்கந் துறந்த அவனால், வைரமனப் புத்தனால், சிந்தை கலங்கா அவனால்தான் 'சீலம்' காட்ட, புரிய, செய்யமுடிந்தது. அட்டசீலம் எழுதவும்முடிந்தது. புத்தன் ஒரு "அட்டசீலம்" ★

மதிப்பு

"கடவுள்"

"பெரியவங்க என்கிறதைக் கொஞ்சமாவது மதிச்சி நடக்கிருனு! தறுதலையா திரியுது!" என்று சொல்வதையும்,

"இதைப் பார்த்து உங்க மதிப்பு என்ன என்று சொல்லுங்கோ" என்று பொருளின் மதிப்பைக் கேட்பதையும்,

"உங்களுக்கு அவரை தெரியுமா! எப்படிப்பட்டவர்!" என்று ஒருவர் கேட்க, மற்றவர்

"யாரு! அவரா! என்ன இப்படி லேசா கேட்டுவிட்டீர்கள்! அவரை லட்சத்துக்கு மதிக்கலாமே" என்று அவரை பொருளாதார திராசில் எடைபோட்டு மதிப்பிடுவதையும் அன்றாட வாழ்க்கை சம்பவங்களில் கேட்கிற சாதாரணசொல்வழக்காகும்.

மதிப்பு என்பது மனிதவாழ்க்கையில் படிப்படியாக சமூகத்தில் உயர்வு தாழ்வு நிலைமை சொல்லும் சொல்லாக தற்காலம் மதிக்கப்படுகிறது. பொருளின் மதிப்பு என்ன என்ற மூலத்திலிருந்து, மனிதத் தன்மையின் தராதரத்தை அளவிடும் நிலைக்கு செல்வத்தின் பெயரால் அந்த சொல் வளர்ந்துவிட்டது. மனிதனுடையவாழ்க்கையில் மதிப்பு, கௌரவம், மரியாதை எல்லாம் அவரவர்களின் பொருள் நிலைக்கேற்ப ஏற்றதாழ்வாக இன்றைய சமுதாயத்தில்இருந்துவருகிறது. மனிதத்துவத்திற்கு, நடத்தைக்கு, நேர்மைக்கு, ஒழுக்கத்திற்கு கொடுத்துவந்த மதிப்பு, கௌரவம், தற்சமயம் செல்வத்திற்குப் பின் ஒளிந்துகொண்டது.

பொருளாதார துறையில் ஏற்பட்ட ஏற்றதாழ்வுகளால் வாழ்க்கையில் ஏழ்மைநிலையை ஒருவர் அடைந்துவிட்டால் அதனுல் அவருடைய மதிப்பும் குறைந்துவிட்டதுபோல்தான் இன்றைய உலகம் எண்ணுகிறது. செல்வமும், சீருமாக இருக்கும்பொழுது சமுதாயத்தில் அவர் ஒரு பிரமுகராக, பெரிய மனிதராக, ஊரே மதிக்கும்படியாக இருந்திருக்கலாம். ஆனுல் இப்பொழுது அவரைப்பற்றி நினைப்பார் உண்டா! அவரைஇகழ்ச்சியாக மதிப்புக் குறைவாக பேசுவதற்கு தற்சமயம் நிறையபேர்கள் இருப்பார்கள்.

மற்ருெருவிதமான மதிப்பு அதிகார மதிப்பு! ஆட்சி பீடத்திலோ, அதிகாரத்திலோ ஒருவர் இருந்தால் தனிமதிப்பு ஏற்பட்டு

விடுகிறது. அதிலிருந்து நீக்கப்பட்டாலோ, நீங்கினாலோ அந்த மதிப்பு, கௌரவம் உண்டா? அலுவலாக ஒரு அதிகாரி ஒருவரிடம் செல்கிறார். அதிகாரி வருவார் பின்னே, அவர் பியூன் செல்வான் முன்னே என்றபடி செல்வார்கள். சென்ற இடத்தில் அவருக்கு அமோகமான வரவேற்பு, மரியாதை, காபி பலகாரங்கள், வெற்றிலைபாக்கு முதலியவைகள் தாராளமாய் கிடைக்கும். வந்தவரும் வந்தவேலையை முடித்துக்கொண்டு மேற்கொண்டு அலுவல்களைக்கவனிக்க சென்றுவிடுவார். அவர் போனபின்பு தான் தெரியும் சென்றஇடத்தில் அவருக்கு கிடைத்த மதிப்பு எத்தகையது என்று!

"ஆமாம், உங்க கடைக்கு யாரோ ஆபீஸர் வந்திருந்தார் போலிருக்கிறதே!"

"வந்தான்! நம்ப பிராணனை வாங்க! விடிஞ்சு எழுந்திருந்து தொழில் பண்ண வந்தால் அந்த ஆபீஸர், இந்த இன்ஸ்பெக்டர் என்று வந்துவிடுகிறான்கள்! தினம் இதே சோதனையா போகிறது! அவ்வளவு பேர்களுக்கும் காபி பலகாரங்கள் வாங்கி கொடுப்பதற்கே ரூபாய் நான்கைந்து தீர்ந்துவிடுகிறது. தெண்டப் பயல்கள்" என்று சொல்வார். கண்முன் மதிப்பு வேறு! உள்ளத்து மதிப்பு வேறு!!

தற்காலம் வாழ்க்கைத் துறையில் யாரை எடுத்துக்கொண்டாலும் நாலுபேர் மதிக்க நடந்துகொள்ள வேண்டுமென்று எண்ணுகிறார்கள். பிறர் நம்மை எப்படி மதிக்கிறார்கள் என்றுதான் எக்காரியத்தைச் செய்யுமுன்பும் கவனிக்கிறார்கள். நாம் எடுத்துக்கொண்ட காரியம் சரிதானா! அதை செய்யவேண்டியது நம் கடமைதானா! எப்படி செய்தால் இலகுவில் முடித்துக்கொள்ளலாம் என்றெல்லாம் சிந்திப்பது இல்லை. இந்தக் காரியத்தை இப்படி ஆடம்பரத்துடன், விளம்பரத்துடன் செய்தால் நம் மதிப்பு உயரும் என்ற எண்ணத்துடன் தான் எந்தக் காரியத்தையும் மேற்கொள்கிறார்கள்.

பகட்டான உடைக்கும், படாடோபமான பேச்சிற்கும், ஆடம்பரமான நடைக்கும், அலட்சியமான நோக்கிற்கும்தான் இக்காலத்தில் மதிப்பு என்று "நாகரீக உலகம்" கொடுக்கிறது. அந்த நாகரீக உலகில் நாமும் சரிசமானமாகக் கலந்துகொள்வதில்தான் மதிப்பு இருக்கிறது என்று பொருள் வசதி இல்லாதவர்கள்கூட அந்தப் போலி கௌரவத்திற்காக தங்கள் சக்திக்கும் மீறி செலவு செய்து வாழ்க்கையைச் சிக்கலில் கொண்டுபோய் நிறுத்திவிடுகிறார்கள்.

இன்றைய உலகில் உழைப்பிற்கு மதிப்புஉண்டா? தியாகத்திற்கு புகழ் உண்டா? சேவைக்கு கௌரவம் உண்டா? உண்மையான உழைப்பிற்கும், தன்

படித்தவள்?

[மகிழ்ச்சி சதானந்தம்]

"இந்தாங்க! உங்களைத்தானே! நம்மகல்யாணி படித்ததுபோதும், பேசாம இன்னைக்கே போய் அவளைக் கூட்டிக்கொண்டு வந்து விடுங்க!"

"என்னடி இது! இருந்தார் போல் இப்படி ஆரம்பித்துட்டே இன்னைக்கு!"

"இன்னைக்கென்ன! காலேஜிலே நீங்க அவளைப் படிக்கவைக்கவேண்டும் என்று சொன்ன நாளில் இருந்துதான் சொல்லுறேன்? நீங்கதான் மகளை பீ. ஏ.படிக்கவச்சி உத்தியோகத்தில் அமர்த்தப் போகிறவர் மாதிரி குதித்தீர்கள் அவள் சொல்லைக் கேட்டுக்கொண்டு"

"உத்தியோகத்தில் வைப்பது என்றால்தான் படிக்க வைக்க வேண்டுமா என்ன?"

"இல்ல, பொம்பளைங்க பிள்ளையையும், புருஷனையும் சேவித்து, சோறு சமைத்துப் போட்டு குடும்பத்தை நிர்வகிக்க, பீ. ஏ. படிக்கவைத்துப் பணத்தைப் பாழாக்கணுமாக்கும்?"

"ஏண்டி, இது என்ன உங்க காலம் என்று நினைத்தாயா, சலவைக்குப் போடும் கணக்கு எழுதத் தெரிந்தால் போதும் என்று நினைக்க! இது விஞ்ஞானகாலம்! 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமிருந்த நாட்டில்' என்று ஆணும், பெண்ணும் சமத்துவமா சகல விஷயத்திலும் இணைந்து முன்னேறும் காலம்"

"ஆமா...ஆமா...முன்னேறும் காலம்தான்! என்னமோ விஞ்ஞான காலம்னு சொன்னீர்களே அது பெண்களைப் பொறுத்தவரை விதவிதமா சிங்காரிக்கும் 'சினிமாக் காலம்' என்றுதான் சொல்லவேண்டும். சினிமாக்காரிகளைப்போல இந்தக் காலத்துச்

(முன் பக்கத் தொடர்ச்சி)

னலமற்ற தியாகத்திற்கும், அன்பான சேவைக்கும் என்றும் மதிப்பு உண்டுதான். இன்று இல்லை என்றாலும் நாளை மக்கள் உணர்ந்து மதிப்பு கொடுக்கத்தான் செய்வார்கள். மதிப்பு என்ற சொல் நம்மைத் தேடி வர வேண்டும்! அந்தச் சொல்லின் பின்னால் நாம் செல்லக்கூடாது! ஆனால் தற்காலம் நடப்பது என்ன? உண்மையில் என்றென்றும் நிலைத்து நிற்கும் மதிப்பின் தன்மையை மக்கள் உணர்வார்களா?

சின்னதுகளும், பெரியதுகளும், மேல்சேலையைக்கூட சரியாகப் போடாதபடி அப்படித்திரியுதுக”

“ஆமா, மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சு போடுகிறயே! இப்ப நாம் பேச வந்தது படிப்பு விஷயம்”

“ஆமா... அதைத்தான் நானும் சொல்லுகிறேன். எங்க காலத்திலே சலவைக்கணக்கு எழுதத் தெரிந்தால் போதும் என்ருல், இந்தக் காலத்தில், உள்ளூரிலே இருக்கிற பள்ளிக்கூடத்தில பத்துப்படித்து, மகிழ்ச்சி, கலைமகள், கலைக்கதிர் இப்படி ஏதாவது நாலு பத்திரிகை வாசிக்கத் தெரிந்துகொள்வதுடன்நிறுத்திக் கொள்ளக் கூடாதோ!”

“அப்படி, பத்துப் படித்தவள் நீ முன்புசொன்னுயே, சினிமாக் காரிபோல ஜோடிப்பது என்று, அதுபோல் செய்வதில்லை, காலேஜில் படித்தவள்......”

“நிறுத்துங்க.. படிக்காதவளாவது கொஞ்சம் பயத்துடன் சேலையை அடிக்கடி ஒழுங்கு படுத்திக்கொள்ளுகிறுள். ஆனல் படித்தவள்..? படிக்காதவளைப் பற்றித்தான் கவலை இல்லையே. ஆனல் படித்தவள் தவறுசெய்யலாமா? எல்லாம் நான் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறேன், இந்த முன்னேறும் வீரத்தமிழ் அணங்குகளின் இன்றைய விபரீதப் போக்குகளை!”

“இதுக்காகத்தான் கல்யாணியை படிக்க வைத்தது போதும் என்று அடித்துக்கொள்ளுகிருயா? நம்மபிள்ளை எல்லாம் அப்படி ஒன்றும் தவருகநடக்காது?”

“கள்ளப் பருந்துக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு. தானு மெச்சுமாம் தவுட்டுக் கோழி, அதா மெச்சுமாம் அரிசிக் கொழுக்கட்டை. தங்கள் தங்கள் பிள்ளைகளை அப்படி இருக்காது, இப்படிநடக்காது என்று நினைத்த, பெத்தவங்க மூஞ்சிலே கரியப் பூசின காலேஜ் காரிகைகள் பலரின் பேச்சு ஊருக்குள்ளே நிறைய நடமாட ஆரம்பிச்சுடுச்சு. பேசாம இன்றைக்கே கல்யாணியை வீடுகொண்டுவந்து சேர்த்துட்டு மறுவேலைபாருங்க”

“ஊருக்குள்ளே அங்கொன்றும் இங்கொன்றுமா நடந்ததை வைத்துக்கொண்டு குடியேமுழுகியமாதிரி என் துடிக்கிற, தரையில் துள்ளிவிழுந்த மீன்போல”

“தரையில் விழுந்த மீன், மீண்டும் தண்ணீருக்குள் செல்ல துடிக்கத்தான்செய்யும். இல்லாவிடில் அதன் உயிர் அல்லவா போய்விடும்? அதுபோல என் மகளுக்கும் ஒரு அவச் சொல் வராமல் காலாகாலத்தில் கல்யாணம், காட்சி செய்து பார்க்க வேண்டும் என்று என் மனம் துடிக்கிறது. ஒரு வயதுப்பெண்ணுக்குக் கெட்ட சொல் ஏற்பட்டுவிட்டால் பின் அந்தக்கறை எந்த மாற்றிலும் போகாது. என் மனது கிடந்து அடித்துக் கொள்வது உங்களுக்கென்ன

தெரியப் போகுது. பீ. ஏ. முடித்துவந்தால் அவளை வேலைக்கா அனுப்பப் போகிறீர்கள்? அதுதான் நம் கௌரவத்திற்கு (?) அடுக்காதே! பிறகு எதற்கு காலேஜ் படிப்பு? படிக்காதவளைவிட படித்தவளிடம்தான் இந்தக்காலத்தில் அதிக தவறான நடவடிக்கைகளெல்லாம் நடமாடுகிறது நவீனமாக — நாசூக்காக என்று கேள்வி.

நம்ம முதுகு நமக்குத் தெரியாது. அதுபோல நம்மபிள்ளையோட நடவடிக்கைகள் தெரிந்த நமது நெருங்கிய பந்துக்கள்கூட நம்மிடம் நேரில் கூற கூசுவர். எனக்கு என்னமோ பயமாக இருக்கிறது. அதுவும் இன்றைக்கு இந்தக்கதையைப் படித்ததிலிருந்து எனக்கு ஒரே திகிலாக இருக்கிறது. நீங்களும் இதைப் படித்துப்பாருங்கள்'' என்று அருகில் கிடந்த புத்தகம் ஒன்றைக் கொண்டு வந்து பக்கத்தைப் புரட்டிக் கணவனிடம் கொடுத்தாள். அவரும் கதையை வாசிக்க முற்பட்டார்.

* * * *

சுமார் 14 வருடங்களுக்கு முன் ஹைஸ்கூலில் ஐந்தாவது பாரத்தில் படித்துக்கொண்டிருந்தாள் கிருபா. பெண்களுக்கென தனிஉயர்நிலைப்பள்ளி இல்லாமையால், ஆண்களுடன் பெண்களும் சேர்ந்து படிக்க அரசாங்கத்தாரின் அனுமதி இருந்தமையால் அங்கு படித்துவரலானாள்.

நிறைந்த ஆஸ்தியும், அந்தஸ்தும் உடையவர்கள் அல்ல அவள் பெற்றோர். சுமாரான வருமானம். கௌரவமான வாழ்க்கை. கண்ணியமான குடும்பம். இவர்களின் ஒரே மகள்தான் கிருபா. சாதாரண அழகுதான். கூர்மையானபுத்தி. ஆனால் குள்ளமான தோற்றம். வெள்ளை உள்ளம். கருத்த மேனி. கண்டோர்மயங்கும் காரிகை அல்ல. ஆனால் கொஞ்சம் வசீகர வார்ப்பு. இளமைக்கேற்ப எழில்மிக்க அங்க அமைப்புகள். அதற்கேற்ப ஆடை ஆபரணங்கள். அந்தப் பள்ளியிலேயே அவளை அறியாதார் இலர். அழகினால் அல்ல, அறிவினால். அவள் வகுப்பில் அவள்தான் முதல் மார்க்.

பெற்றோருக்கு ஒரே கவலை. கல்வியில் கிருபா சிறக்கச்சிறக்க இவர்கள் உள்ளம் சிதறியது.

குற்றமறப் பெற்ற பெண்ணை எப்பொழுதும் கன்னியாகவே கண்டுகளிக்க எந்த தாய் தந்தை யரும் இந்நாட்டில் விரும்பார். ஆகவே கிருபாவின் கல்யாணத் திற்கு ஏற்பாடுசெய்தனர் அவள் பெற்ருேர். ஆள் கருப்பு. சுமா ரான அழகு. செல்வமும், செல் வாக்கும்செழித்தவர்களும் அல்ல. அரிவையரின் அறிவை மட்டும் வரவேற்று மாலையிட்டு ஆட் கொள்ள எந்த ஆடவனும் முன் வருவதில்லை என்ற உண்மையை நன்கு அறிந்தவர்கள். ஒன்று அழகியாக வேண்டும். இல்லை அதிகப் பணத்துடன் வரவேண் டும். இதைத்தானே இன்றைய மணமகன் மார்க்கெட் எதிர் பார்க்கிறது.

கிருபாவோ இன்றுஐந்தாவது பார மாணவி. ஆகவே அவளு டைய இல்வாழ்க்கை கலைரசம் குன்ருதசோபிக்கக் குறைந்தது பத்தாவது வரை படித்தவனே அல்லது அவள் அளவு வாசித்த வனே வாழ்க்கைத் துணைவனுக வாய்க்கவேண்டும். ஆனல் மேற் கூறிய அளவு கற்ற காளையோ காலரை தூக்கிவிட்டுக்கொண்டு கண்ணுக்கும் கருத்துக்கும் இசைந்த இல்லக் கிழத்தியைத் தேடி கன்னியர்குழாமிலே கருட பார்வையைச் செலுத்தித் திரிகி ருன்.

இவற்றை எல்லாம் சிந்தித்தே கிருபாவின் பெற்ருேர் அவளை கிரகலக்ஷிமியாக்கமுயற்சித்தனர். ஆனல் அன்று அவள் ஒரேபிடி வாதமாக "என்கல்வியை நானுக நிறுத்துமுன் என்னை மணக்கோ லத்தில்காணமுற்பட்டால் பிணக் கோலத்தில்தான் காணலாம். கல் விக்குப்பின் கருத்துக்கேற்றகண வன் கிட்டவில்லையானல் கன்னி யாகவே இருந்து காலம் கழிப் பேன். சுதந்திர இந்தியாவில் ஆடவரின் அறியாமையின்கீழ் அல்லலுறும் எண்ணற்ற இளம் சகோதரிகளின் மேம்பாட்டிற் காக உழைப்பேன். இதுதான் என் இறுதியான தீர்மானம். இதற்குமேல் என்னிடம்ஒன்றும் கூறவேண்டாம்" என்று வன்மை யாகக்கண்டித்துக்கூறி வாழ்க்கை யில் அடிபட்ட வயோதிகத் தாய் தந்தையரை வாய் அடைத்து உள்ளம் கருக விட்டுவிட்டாள்.

மறுவருடம் எஸ்.எஸ்.எல்.சி. பரீக்ஷையில் அவள் வகுப்பில் முதல்மார்க் வாங்கித் தேறினள். இவளை பள்ளியில் படிப்பில் போட்டியிட்டவன் சுந்தரம். ஆனல் அவன் பெற்றது கிருபா வைவிட மொத்தமார்க்கில்ஒன்று தான் குறை. அவனும் சாதா ரண குடும்பத்தைச் சேர்ந்தவன் தான். ஆனல் சற்று வசீகரத் தோற்றத்துடன் கூடிய வெண் நிறத்தான். கல்விப்போட்டியின் காரணமாக இருவருக்கும் ஒரு வரைப்பற்றி ஒருவருக்கு மன துள் ஒருவித நினைப்பு இருந்து கொண்டேதான்இருந்தது. காத லாக இல்லாவிட்டாலும் ஒருவித

கருத்தைக் கிளப்பி, கலக்கத்தை உண்டுபண்ணிவிட்டது.

வீட்டில் பெற்றோர்களிடம் ஏற்பட்ட பலவித எதிர்ப்பிற்கிடையே ஏகினள் கல்லூரிக்கு கிருபா. சுந்தரமும் ஒரு தனவானின் தயவால்—கடன் கொடுத்து உதவச் சம்மதித்த தயவால்—வெளியூரில் அவள் சேர்ந்திருந்த அதேகல்லூரியில் சேர்ந்து பயிலலுற்றான்.

வேற்றூர்களிலிருந்துவந்திருந்த அனேக மாணவமாணவிகளின் கல்விப் போட்டி அதிகமிருந்தமையால் இவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் போட்டியிடுவதை விட்டு இணைந்து, ஏனையோரை வெல்ல முற்பட்டனர். இந்த இணைப்புத்தான் காதலில் போய் இணைத்தது. பி.ஏ. முடிந்தவுடன் இருவரும் மணம் செய்துகொள்வது என்று இருவரும் வாக்குறுதி பரிமாறிக்கொண்டனர்.

நான்கு ஆண்டுகள் ஆட்டத்திற்கும் பாட்டத்திற்கும், படிப்பிற்குமிடையே ஓடி மறைந்தது. பி.ஏ. பரீக்ஷை எழுதி முடித்துக்கொண்டு இருவரும் ஒன்றுகவே இரயில் ஏறி ஊர்சென்று இறங்கி, இரயிலடியில் பிரியும்போது விரைவில் விவாகத்திற்கு வேண்டிய ஏற்பாடு செய்வது என்ற பேச்சுடன் பிரிந்தனர்...

ஒரு வாரம் சென்றபின் ஒரு கடிதம் கிருபாவின் விலாசமிட்டு வந்தது. அதன் முத்திரையிலிருந்து அது உள்ளூரிலிருந்தே தான் போட்டது என்பது தெரிந்தது. அப்படிப்பட்ட தபாலைத்தானே எதிர்பார்த்து இருந்தாள்! உள்ளம் ஒரு நிலை கொள்ளாது ஆனந்தவெள்ளத்தில் திளைத்தது. திருமணமே முடிந்தாற்போல் சித்தம்மகிழ்ந்தாள். மனம்பதற கைகள் நடுங்க, கடிதத்தின் கவரைக் கிழித்துப் பிரித்தாள். ஆம்! தலைப்பில் அவன்—சுந்தரம்—பெயர்இட்ட லெட்டர் பேப்பர்தான். உள்ளம் படபடவென்று

மாணவிகள் பவுடர் போடக்கூடாது!

பாகிஸ்தானில் தடையுத்தரவு

மேற்குப் பாகிஸ்தானில் உள்ள பவல்பூர் சமஸ்தானத்தில் காலேஜ், ஹைஸ்கூல்களில் படிக்கும் மாணவிகள் சில்க் ஆடையும், பவுடர் முதலிய ஆடம்பரப் பொருள்களையும் உபயோகிக்கக் கூடாதென கடுமையான தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சென்றவருஷத்தில் வடமேற்கு எல்லைப்புற மாகாண சர்க்கார் இதேபோல் தடை உத்தரவுகள் பிறப்பித்தது. பவல்பூர் சமஸ்தானத்தில் காலேஜ் மாணவிகளுக்கும் பள்ளிக்கூடப் பெண்களுக்கும் இருக்கவேண்டிய ஆடை வகைகளை பவல்பூர்சர்க்கார் நிர்ணயித்துள்ளார்கள். அதாவது பாப்ளின் சர்ட், லதாசல்வார் வெள்ளை மல், அல்லது வலைதுப்பட்டி ஆகிய 3 வகை துணிகளையே பெண்கள் ஆடையாக உபயோகிக்கலாம்.

அடித்து உள்ளே எழுதி இருப்பதைப் படிக்கத் துருவியது.

முதல் வரியைப் படித்தவுடன் வார்த்தை படீரென்று நின்றது. கண்ணை ஒருமுறை கசக்கிவிட்டு மறுமுறையும் வாசித்தாள். வாசிக்க முடியவில்லை. வாய் அடைத்துவிட்டது. நெஞ்சு குமுறியது. நிலைகொள்ளாது தவித்தாள். புயலில் சிக்குண்ட புஷ்பம்போல் துவண்டாள். கண் அடைக்க அப்படியே கட்டிலில் சாய்ந்தாள்.

கடிதத்தில் மிகச் சுருக்கமான விஷயந்தான் இருந்தது.

அன்புமிக்க கிருபா!

அழிந்தது நம் மனக்கோட்டை. ஒழிந்தது நம் உறவு. எனக்குப் பணம் கொடுத்து படிக்க உதவிய பணக்காரர் தன் மகளுக்காக என்னை, நான் கொடுக்க வேண்டிய பணத்திற்கும் பதில் வாங்கிக் கொள்ள தீர்மானித்துவிட்டார் வெள்ளையனின் அடிமை போயும் இன்று வெள்ளிப் பணத்திற்கு அடிமையாகிவிட்டேன் —இல்லை இல்லை—அடிமையாக்கப்பட்டுவிட்டேன். இதற்கு என் தாய் தந்தையர்களின் பூரண ஆதரவு. இசைய மறுத்தால் நிச்சயம் என் வாழ்வு பாழ். இதற்குமேல் எழுத முடியவில்லை.

அபாக்கியன்,
சுந்தரம்.

காதல் விஷயத்தில் கற்றவரும் மற்றவரும் சுய அறிவை அடகு வைத்துவிடுகின்றனர். அதே போல்தான் பணவிஷயத்திலும் பறிகொடுக்கின்றனர் பகுத்தறிவை. இதில் சுந்தரம் என்ன விதிவிலக்கா?

அன்று வளம் நிறைந்த பூந்தோட்டமாகத் தென்பட்ட வாழ்க்கை இன்று கானல் நீர் கொண்ட பாலைவனமாகக் காட்சி அளித்தது கிருபாவிற்கு. அன்றொருநாள் அப்பா, அம்மாவிடம் அறிவித்ததை ஞாபகத்திற்கு இழுத்து, விவாகத்தைவெறுத்து சமூகசேவையில் ஈடுபடத் தலைப்பட்டாள். ஓராண்டு பள்ளியில் ஆசிரியையாக அமர்ந்து பின் எல். டி. ஒருவருடம் படித்துப் பாஸ் செய்து, பழைய படி உபாத்திமைத்தொழிலையே மேற்கொண்டாள்.

என்னதான் சுறுசுறுப்பாகப் பள்ளிக்கூட வேலைகளைக் கவனிக்க முற்பட்டாலும் இடை இடையே சிந்தனை எங்கெங்கோ சென்று எண்ணற்ற எண்ணங்களை எண்ணி ஏதேதோ தொத்து வியாதிபோல் துளைத்துக்கொண்டேதான் இருந்தது. வயதிற்கு ஏற்ப இயற்கையாகஎழும் புலன் உணர்ச்சிகள் எலும்புருக்கி நோயாக உடல் நலிவில் கொண்டுவந்து சேர்த்தது. வயதும் ஏறிக்கொண்டே வந்தது. ஊரிலுள்ள வம்பர்கள் வதந்திகள் பலவற்றைக் கிளப்பிவிடவும் தலைப்

பட்டனர். வீண் பழிக்குப் பயந்து பள்ளி வேலையையும் விட்டுவிட்டு வீட்டிலேயே தங்கி உடல்நிலையைப் பண்படுத்த முற்பட்டாள்.

"பிரமச்சாரி என்று கூறிக்கொண்டு, ஒரு ஆடவன் எப்படி நடந்துகொண்டாலும் அவனைப் பற்றி உலகம் அதிகம் கவனிப்பதில்லை. ஆனால் ஒரு பெண் கன்னியாகவே காலம்கழிக்கஎண்ணி எவ்வளவுதான் உண்மையாக, யோக்கியமாக, ஒழுக்கமாகநடந்துகொண்டாலும், அதை இந்த ஆடவர் உலகம் மட்டுமல்ல, பெண்கள் உலகமும் தூற்றுது, அவமானமாகப் பேசாது விட்டு வைப்பதில்லை. பெண் என்ற மென்கொடி அவச்சொல் என்ற அசுரக்காற்றில் ஒடிந்துவிடாதபடி பாதுகாப்புடன் ஓங்கி வளர வேண்டுமானால், ஆண் என்ற கொழுகொம்பை கல்யாணம் என்றபிணைப்பால் சுற்றிப்பின்னி அணைத்து வாழ்ந்து பூ, காய், பழம் என்ற மக்களைப் பெற வேண்டும். அப்பொழுதுதான் கண்ணியம் உண்டாகும்" இதை நன்கு உணர்த்தி படித்தால் மட்டும் போதாது என்பதையும் எண்ணச் செய்தது கிருபாவின் அன்றைய நிலை

சிந்தை தெளிவுற்ற பொழுது எதிரே தன் தகப்பனார் நிற்பதைக்கண்டு திடுக்குற்று 'அப்பா நீங்கள் எப்பொழுது வந்தீர்கள்? மண்டைகுத்தியது. அப்படியே கண்ணயர்ந்துவிட்டேன்' என்று கூறியபடியே வழியும் கண்ணீரைத் துடைத்தாள்.

"அம்மா கண்ணீருக்குக் காரணம்? பேப்பரில் ஏதாவது..."

"அப்பா நீங்கள் 14 வருடங்களுக்குமுன் எனக்கு கூவமாகச் செய்த உபதேசத்தை சமீபத்தில் நடந்த மாதர் சங்கக் கூட்டத்தில் கூறி இருக்கிறார் ராஜாஜீ" என்று கூறி ஏக்கத்துடன் கூவி அலறி அழுதாள்.

பேப்பரில்இருந்ததுஇதுதான்: "பெண்கள் வாழ்நாள் பூராவும் தன்னந்தனியாக இருந்து சமூக சேவையைமேற்கொள்வதைவிட, கல்யாணம் பண்ணிக்கொண்டு குழந்தைகளைப் பெற்று சிறந்த முறையில் அவர்களை வளர்ப்பது மேலானது என்பது என் அபிப்பிராயம்"

கிருபாவின் கண் திறந்தது. ஆனால்....?

* * * *

கதையைப் படித்த அவரும் ஒரு பெருமூச்சுவிட்டார்.

சென்னை ராஜ்யத்தில் முதலாவது பெண் டிப்டிகலெக்டர்

திருவாங்கூரைச்சேர்ந்த குமாரி ஜார்ஜ் ஐ. ஏ. எஸ். அவர்கள் இந்திய சர்க்காரால் சென்னை ராஜ்யத்திற்கு டிப்டிகலெக்டராக நியமிக்க அனுப்பப்பட்டுள்ளார்.

இந்த ராஜ்யத்தில் நியமிக்கப்படும் முதல் பெண் டிப்டி கலெக்டர் இவர்தான்.

வெட்டடா!

ச. ஆறுமுகநாதன்
இலங்கை

வெட்டடா! வெட்டடா! வெட்டடா!
வழியடைத்து இடரிளைக்கும் வலிமைமிக்க ஜாதிச் செடியை (வெ)

கடமை யாற்றும் உணர்ச்சி பெற்ற காளை யுந்தன் வாழ்க்கையில்
கல்லும் முள்ளும் நீக்கி ராஜ பாட்டை காணும் வேலையே
உடமை யென்று மனதிற் கொண்டு உறுதி குன்ற லற்றதாய்
ஊக்க மெய்து ஆக்கங் காண ஓங்கி யோங்கி ஜாதியை (வெ)

உழைத்துக் குவிக்கும் ஏழை வயிறு ஒட்டி மடியக் கண்டநீ
உரிமை உரிமை எனமுழங்கும் ஓசை செவியிற் பட்டநீ
விழித்துக் குதித்து கடமை இயற்ற வீரமிழந்து கிடப்பதோ?
வெற்றி யுனதே சற்றுந் தயங்கேல் ஓங்கி யோங்கி ஜாதியை (வெ)

அன்பு பேசித் துன்பம் விளைக்கும் அதர்மர் வீசும் வலையிலே!
அரிய காலம் விரைய மாகி அனர்த்தம் விளைக்கும் நிலையிலே!
இன்பம் உளதென் றெண்ணி அதனில் இச்சை யுற்று வீழ்ந்திடேல்
இழிவு அழிவு யாவும் மறைய ஏற்றத் தாழ்வுச் செடியினை (வெ)

மாதர் உரிமை பெறுதல் தடுக்கும் மடமையான முட்செடி
மண்டிக் கிடக்கக் கண்ட உனதின் மனதில் உணர்ச்சி வல்லையா?
நாதம் புரியும் நாரி மணிகள் வாழ்க்கை இயற்ற வேண்டுமேல்
நஞ்சில்முளைத்து அறிவை அமிழ்த்தும் மூடக்கொள்கை யாவையும்(வெ)

சென்னையில் 'மகிழ்ச்சி' விற்பனையாளர்

A. S. மில்னர் அன் கோ

2, பார்த்தசாரதிசுவாமி முதலாவது தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

அவள் அபலை

[க. கி. மூர்த்தி]

அவளைப் பிச்சை எடுக்கப் பிறந்தவள் என்று யாரும் சொல்லிவிட முடியாது. வறுமையின் வலிய இரும்புப் பிடிகளில் சிக்கிய அவளுக்குச் சமூக நீதி கிடைக்கவில்லை. பொல்லாத உலகம் அதை விதி என்று கூறி அவள் வேதனைக்கு வித்திட்டது. வாடி வதங்கிப்போன அவளது மேனி பசுந்தளிர்ச் சோலையிலிருந்து பறித்து எடுத்து கசக்கி முகர்ந்தபின் புழுதியில் எறியப்பட்ட புதிய மலரைத்தான் நினைவூட்டியது!

தெய்வத்தின் தேரோடும் வீதிகளில் வாழும் தேவதாசிகளின் குடும்பத்திற் பிறந்தவளுமல்ல அவள்—அப்படி இருந்தாலாவது அவள் வழுக்கிவிழுந்துவிட்டாள் என்று சொல்லலாம். அவள் இப்படி சட்டியும் கையுமாய் அலைந்து பிச்சையெடுக்க வேண்டிய அவசியம் சேராதபடி 'கன தனவான்கள்' கைதூக்கி விட்டிருப்பர்!

ஆனால் கேவலம் அவள் ஒரு பிச்சைக்காரியாக மாறின காரணத்தால், தன் கற்பை விலைகூறி விற்பனைசெய்யும் சரக்காக மாற்றாத காரணத்தால் தெருத் தெருவாக நாதியற்று நடந்துகொண்டே இருந்தாள்!

"அம்மா, தாயே! புண்ணியவான்களே, புள்ளை குட்டிகளைப் பெற்ற மகராசர்களே! இந்த ஏழைபடும் துன்பத்தை ஏறெடுத்துப் பாருங்க! எனக்காக இல்லை இந்தப் பச்சைப் பாலகனுக்காகவாகிலும் பரிதாபப்பட்டு அதன் பசியைப் போக்குங்க அம்மா!" அவளின் அன்றாட 'பல்லவி' இது. அதைக் கூறுவதற்குக் கூட அவள் வாய் கூசும்.

"இந்நேரத்திலே இங்கேயெல்லாம் என்ன இருக்கும்? பார்த்தால் பரிதாபமாகத்தான் இருக்கு. கழுத்தில் கயிற்றைக் காணோம். கையிலே மட்டும் ஒருகுழந்தை. தூ! என்ன உலகமடி இது? ஏம்மா, உன்னைப் பார்த்தால் பிச்சைக்காரியா தோணலியே. அப்படியிருக்க உனக்கு எவங்க உணவு தருவாங்க. போ, போ ஒழுங்கா பொழைக்கிற வழியைப்பாரு" அவளுக்கு அடிக்கடி கிடைக்கும் பதில் இப்படித்தான் இருந்தது.

"பாவம்...பிச்சைக்காரி!" என்று பரிதாபக் குரல்களும் எழும்பாமல் இல்லை. ஆனால் அவையெல்லாம் அவளது ஒரே குழந்தையின் சின்னஞ்சிறு வயிற்றை நிரப்பப் போதுமானதாக இல்லை.

மாடி வீடுகளைக் கண்டால்,

அவள் நெருங்கவே பயந்தாள். பளிங்குத்திண்ணையின்மீது பட்டு மெத்தையிற்புரளும் படாடோபிகளின் 'பாம்புப் பார்வை'யை அவள் அறிவாள்.

சுற்றிச் சூழ்ந்திருக்கும் சுவர் வேலியும், நாள் முழுதும் பூட்டியேகிடக்கும் இரும்புவாயிலும் அவளைப் பார்த்துக் கஞ்சிக்கு விதியற்றவள் என்று எள்ளி நகையாடும்.

வாசற்படிகளில் அங்குமிங்கும் உலவிக்கொண்டு இருக்கும் சீமானின் செல்லப் பிள்ளைகளான நாய்களுக்கு அவளைக் கண்டால் பிடிக்காதோ என்னவோ, 'வள் வள்' என்று குரைக்கத் துவங்கி விடும்.

அவளை யாருமே ஏறெடுத்துப் பார்ப்பதில்லை. எண்ணெய்காணாது வளர்ந்து நெளிந்து சுருண்டு புரண்டகூந்தல், மெருகுகுன்றிக் கிடந்த பொன்மேனி, சோகத்தின்ரேகை குறுக்கிலும் நெடுக்கிலும் படர்ந்து வெளுத்துப்போன 'பிறை நுதல்', சின்னஞ்சிறு சிசுவும், கஞ்சிக் கலயமும் தாங்கிய கரங்கள், சோறில்லாமல் ஏற்பட்ட சோர்வும், பசியுடன் பகலெல்லாம் பஞ்சையாய்த் திரிந்ததாலுண்டான பரிதவிப்பும், 'துன்புறத்தான் தோன்றினேனா நான்?' என்று நெஞ்சையடைக்கும் துக்கமும் ததும்பிய, சோர்ந்து சுருண்ட கண்கள்—இத்தனையும் கூடிய இந்த நடமாடும் உருவத்தை ஊன்றிக்கவனிப்பார் இல்லை.

அவள் மட்டும் தனி ஒருத்தியாய் இருந்திருந்தால், அவளது சடலம், புதைத்த இடத்தில் மண்ணோடு மண்ணாகிப் புழுவுக்கும் பூச்சிக்கும் விருந்தாகிஇருக்கும்-உலகத்தில் உயிர்வாழ்வோர் பட்டியலில் ஒருபெயர் அடிபட்டிருக்கும்—இறந்தோர் எண்ணிக்கையின் ஒரு புள்ளி அதிகரித்திருக்கும்! ஆனால் அவள்வாழ்ந்தாள் தன் குழந்தைக்காக!

"குழந்தையா! கன்னிபோல் காணப்படும் அவளுக்கு ஏது அந்த அவமானச் சின்னம்?" என்று விபரம் தெரியாமல் வினவும் தோழர்களும் உண்டு. ஆம், அவர்களுக்கும் விடைசொல்லித்தானாக வேண்டும்.

நடுத்தரக் குடும்பமொன்றில் பிறந்த ஓரேபெண் நளினா. பருவ வயதில் பெற்றோரை இழந்து, கண்ணீர்சிந்திய நேரத்தில் எதிர் வீட்டுஏகாம்பரம்தான் அவளைத் தேற்றினான். அடிக்கடிசந்தித்து ஆசைமொழிகள் பேசவும் தவறவில்லை. தக்க பிடிப்பின்றி காற்றில் ஊசலாடும் முல்லைக்கொடிக்குக்கொழுகொம்பு ஒன்றுகிடைத்தது என்று அவள்மகிழ்ந்தாளேயன்றி அது ஒரு வலிவில்லாத போலிமரம் என்பதை அவள் உணரவில்லை. இருவரின் அன்பும் துளித் துளியாகச் சேர்ந்து காதல் நதியாகக் கரை புரண்டு ஓடின.

"கைவிட்டு விடுவீரோ காதலரே?" என்று கேட்டாள் அவள்.

"கலங்காதே கண்ணே, கடிமணம் புரிந்துகொள்ளுகிறேன்" என்று உறுதி கூறினன்.

பேதை நம்பினள். அவர்களின் இன்பவிளையாட்டு காரணமாக அவளின் கரு ஒரு புதிய ஜீவனைச் சுமக்க நேரிட்டது விஷயத்தை அறிந்தான் அவன். உலகின் முன்னிலையில் ஒருபாவமும் அறியாத அவளைப் பழிகாரி என்ற வசவுக்கு ஆளாக்கிவிட்டு மனித உணர்ச்சி, ரத்தபாசம் இவற்றைக் காற்றில் பறக்கவிட்டுச் சென்றுவிட்டான்! துன்மார்க்கம் புரிந்துவிட்டான் துரோகி!

கூட்டில் சிக்கிய சிறுபூச்சி, சிலந்திக்கு இரையாகிவிட்டது! விளக்கில் விளையாடும் விட்டில் அனலில் விழுந்து தன் உயிருக்கே உலைவைத்துக்கொண்டது! தன்னை நம்பிய மலருக்கு மகரந்தப் பொடி தூவி மயக்கத்தைத் தந்துவிட்டு மற்றொரு மலரை நாடிச் சென்றுவிட்டது வண்டு! எதிர்பாராமல் கிடைத்த தவளையை விழுங்கிவிட்டு இரைதேடிக் கொண்டிருந்தது ஒரு கருநாகம்!

வீட்டையும் விற்றுவிட்டாள். இருந்தபணத்தைக்கொண்டுதான் 'இன்பபுரிப் பயணம்' சென்றாள். இடையில் எதிர்பாராதத் தாக்குதலுக்காளாகப் போவதை அவள் முன்கூட்டியே அறியவில்லை. குழந்தையும் பிறந்தது — கையிலிருந்த பொருளும் கரைந்தது நிர்க்கதியானாள் அவள்!

வாழ வழிகள் இரண்டுதான் அவளுக்குத் தென்பட்டன. ஒன்று மானத்தை விற்றுத் தேவையைப் பெறுவது. மற்றொன்று தேவையை நீத்து மானத்தைக் காப்பது. மானமும் தேவையும் இணைந்த சமுதாயம் அப்போது உருவாகவில்லை. சிந்தித்துப் பார்த்தாள். ஒன்று வெளிவரமுடியாத பயங்கரப்படுகுழி. மற்றொன்று முள்நிரம்பிய பாதை. மானத்துக்கு மதிப்பளித்து இரண்டாவது வழியே மேல் எனக் கொண்டாள்.

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவிலுள்ள ஒவ்வொரு 356 பேரில் ஒருவர் ரயில்வே ஊழியர்; ஒவ்வொரு 89 பேரில் ஒருவர் தன் ஜீவியத்துக்கு ரயில்வேயை நம்பி வாழ்கிறார்.

இந்திய உப்புஉற்பத்தி 1951ல் 7,43,76,000 மணங்காக இருந்தது 1952ல் 8,04,68,000மணங்காக அதிகரித்தது.

வருமானவரிவிதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இந்திய வருமானவரி இலாகாவின் பதிவுப் புஸ்தகத்தில் கண்டுள்ளபடி 1952 மார்ச் 31-ந் தேதியன்று 8·85 லட்சம் ஆகும்.

இந்தியாவிலுள்ள பல்வேறு தபாலாபீஸ்களின் சேவிங்ஸ் பாங்குகளில் பணம் போட்டிருப்பவர்களின் மொத்த எண்ணிக்கை 1952 மார்ச் இறுதியில் 44 லட்சமாக இருந்தது; அக்கணக்குகளில் வரவுவைக்கப்பட்டிருந்த மொத்தத் தொகை 200 கோடி ரூபாயாகும்.

திட உள்ளம்கொண்டு, பொறுமையே அணியெனப் பூண்டு முன்சென்ற அவள் தோல்வியே கண்டாள்.

அன்று இரவு மணி பத்து இருக்கும். சினிமா பார்த்து ஒரு பெருங் கூட்டம் 'புற்றீசல்' போல் தியேட்டரிலிருந்துவெளி வந்துகொண்டிருந்தது. அவர்களுக்கெல்லாம் ஒரு பெரிய அதிசயம் அங்கே காத்துக்கிடந்தது.

அருகேயிருந்த பாசி படர்ந்த குளத்தின் கரையில் பலர் நின்றுகொண்டிருந்தனர். அவர்கள் ஆச்சரியமும்ஆத்திரமும்பொங்க என்னென்னவோ பேசினர்.

"விபசாரி! அவளுக்கொரு சிசு, அவமானச்சின்னமாக இப்படியிருந்தால் இளைஞர்கள் எப்படி உருப்படுவர்?" என்றார் ஒருவர்.

"ஊரில் திரியும் இந்த சித்திராங்கிகளை உண்மையில் சிறையிலடைத்துச் சித்திரவதை செய்தால்தான்தகும்" இப்படி ஒருவர்.

"அட இவளாக எப்படியாவது கெட்டலைஞ்சு போகட்டும். அதுக்காக ஒரு பச்சைமண்ணைப் போட்டு இப்படியா பதைக்கப் பதைக்க வதைக்கிறது?" என்றான் எவனோ ஒரு நாடோடி.

"காலம் கலிஇல்லையா இந்த அக்ரமமெல்லாம் அடிக்கொருதரம் நடந்துதான் தீரும். ஆண்டவனுக்கும் சகிக்க முடியாமப் போயி ஒருநாளைக்கு இந்த உலகம் பூண்டோட அழிஞ்சே போகும்" என்றது ஒரு பக்திமானின் குரல்.

"ஆமாம்! இந்தச் சிசுவைக் கொல்ல எப்படி ஐயா இந்தச் சிறுக்கிக்கு மனம் துணிஞ்சது?" என்றார் ஒருவர்.

அந்தப் பிச்சைக்காரியின் அழகிய குழந்தை உயிரற்ற உடலாக, உணர்வற்ற ஜடமாக பாதி உடல் நீரிலும், மறுபாதி நிலத்திலுமாகக்கிடந்தது. அதைக் கண்டுதான் அந்தப் புண்ணியவான்கள் மேலே குறிப்பிட்ட தூற்றல் மாரியைப் பொழிந்தனர்.

ஒருவர் கேட்டார்: "ஏனய்யா இங்கே அவள் எப்படிக் குழந்தையைக் கொன்று போட்டிருப்பா? அப்படிச் செய்தாலும் அழுகைச் சத்தம் கேட்டிருக்குமே!"

உடனே கூட்டத்தில் இருந்த இளைஞன் ஒருவன், "கொல்லுவதுதானா பிரமாதம். பச்சைச் சிசுவாய் இருக்கிறதை மூக்கைச் சிறிது நேரம் பிடித்திருந்தால் தானே திக்குமுக்காடிச் செத்துப் போவுது" என்று விளக்கம் கூறினான்.

ஆனால் அவர்களுக்கு எங்கிருந்து தெரியப்போகிறது அந்த அபலையும் அந்தக் குளத்தில்தான் மூழ்கிக்கிடக்கிறாளென்று!

★

புனைப் பெயர்

[தமிழாதன்]

எழுத்தாளர் ரங்கு தனக்கு புனைப்பெயர் ஒன்றைத் தேடிக் கொண்டிருந்தார். பழைய பத்திரிகைகளைப் புரட்டிப்பார்த்தார். அகராதியை எடுத்து ஆராய்ச்சி செய்து தோல்விகண்டார் ரங்கு. கடைசியாக அவருடைய பெயரிலே நடு எழுத்தை எடுத்துவிட்டு வாசித்தார். 'ரகு' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டார். அதில் அவர் இனிமை காணவில்லை அதுவும் பிடிக்கவில்லை. யோசித்துக் கொண்டேஇருந்தார். பலமான யோசனை. அப்பொழுது 'சார்' என்று வாசலிலிருந்து தபாற்காரரின்குரல் கேட்கவும் வாசலை நோக்கி விரைந்தார்.

"சார் தாங்கள்தானே......"

"ஆம் நான்தான் ரங்கு எழுத்தாளர். ஏதாகிலும் மணியார்டர் வந்திருக்கின்றதா?"

"சார் உங்கள் தகப்பனாரின் பெயர்?"

"குருசாமி! ஏன் சரியாக எழுதப்படவில்லையா? எங்கே பார்ப்போம்".

தபால்காரர் கையிலிருந்த கடிதத்தை வாங்கிப் படித்தார். அதில் 'கு' என்ற விலாசத்திற்கு அடுத்தாற்போல் முற்றுப்புள்ளி வைக்காமல் குரங்கு என்றுஎழுதியிருந்ததைப் பார்த்ததும் எழுத்தாளர் ரங்குவிற்கு சந்தோஷம் பொறுக்க முடியவில்லை. துள்ளிக்குதித்தார். இப்பொழுதெல்லாம் 'குரங்கு' என்ற பெயரில் பிரபல பத்திரிகைகளில் ரங்குவின் கதை,கட்டுரைகள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

★

பூ மார்க் பீடி

ஆசை

"தியாகபூபன்"

பொருட்களை உற்று நோக்கு வதால் பற்று ஏற்படுகின்றது. பற்றினின்றே ஆசை உற்பத்தி. நன்மைக்கும்நலத்திற்கும் ஜென னவாயில் அதுதான். கோபத் தின், பாவத்தின் பிறப்பிடமும் அதுவே. ஆம். குவலயத்தை ஆட்டிவைப்பதுவும் அதுதானே!

அந்த ஆசை பீடித்திருப்போ ரின் மனக்கொம்பில் பச்சோந்தி வேடம் தரிக்கிறது. அது மறைந்து போகாத கானல் நீர். தொடர்கதை போல் வளர்ந்து கொண்டே போகும். மலையை விட உயர்ந்தது என்றும் சொல் லலாம். எவரஸ்ட்சிகரத்தையும் எட்டிப்பிடிக்கும். ஆம், ஆசை யாரைத்தான்விட்டது!

ஆசை! ஆசை!! ஆசை!!! கட லுக்குக் கரையேது? கல்விக்கும் எல்லை இல்லை தான், இந்த ஆசைக்கும் ஓர் அளவு இல்லை! சிறகடித்துப் பறக்கும் மனப் பறவை, ஒய்யாரமாய்க் கிளம்பி உயரத்தில் செல்லும்போது...... இறக்கைகள் முறிந்து வீழ்ந் தால்...... அங்கே நிராசையின் நிழல் நர்த்தனமிடும். அழிவின் பயங்கரம்ஆர்ப்பாட்டம்செய்யும். மனமாளிகை இடிந்து தவிடு பொடியாக நொறுங்கிவிடும். ஆம், ஆசையின் போக்கு ஆழ மானல் அங்கே அறிவு அழி கின்றது

ஆசை! முன்னே சென்றால், முடிவில்லாநீர்ச்சுழல்! பின்னே திரும்பினல் ஆழங் காண இய லாத அகழி. ஆகவே உன் ஆசை அளவோடு இருக்கட்டும்! உனக்கு வேண்டிய—தேவை யைப் பூர்த்திசெய்யும் அளவுக்கு —வாழ்க்கைக்கு வளம் தரும் வழியில் ஆசை பிறக்கட்டும்!! உன் பெயரும் புகழும் உலக ஏட்டிலே பொன் எழுத்துக்க ளால் பொறிக்கப்பட, உன்ஆசை சிறக்கட்டும்!! பச்சைப் பசும் சோலையிலே வசந்தகீதம் பாடும் வானக்குயில், உன் ஆசையின் மேன்மைக்கு வெற்றிக் கீதம் இசைக்கட்டும்!!!

முன்னேறும் பெண்கள்

திருவாங்கூர்-கொச்சி ஹை கோர்ட் வக்கீலான மிஸ் ஜானகி அம்மா எர்ணுகுளம் நகரசபைச் சேர்மனுகத் தேர்ந்தெடுக்கப்பட் டுள்ளார். திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்திலுள்ள நகரசபைக்கு தலைமை வகிக்க ஒரு பெண் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது இது தான் முதல் தடவை.

இது நிஜமா?

— வாகன் —

ஒற்றுமை

பெண்ணிற்குப் பிறந்தகமும், புக்ககமும் ஆற்றின் இரு கரைகள் போல என்றே வைத்துக்கொள்ளுங்கள். இரு கரைகளும் ஒற்றுமை என்ற பாலத்தால் இணைப்பாயிருந்தால் போக்குவரத்து சௌகரியமாகவும், சுலபமாகவும்இருக்கும், இல்லையேல், வெள்ளப் பெருக்கு ஏற்படும் காலங்களில் ஒரு கரையிலேயே ஒதுங்கி தங்க நேரிட்டுவிடும். மூன்று வருடங்களுக்குமேல் வசிக்குமிடத்தில்தான் வோட்டராக எவரும் இருக்க முடிகிறது. சதி—பதி பிரிவு மூன்று வருடங்களுக்குமேல் தாண்டினுல் விவாக ரத்து சுலபமாகிவிடும்.

—ஒரு தேர்தல் அதிகாரி

கருத்து

பிறந்தகத்தில் கொண்ட பிரியத்தால் புக்ககம் போகாது பிறந்தகத்திலேயே இருக்கப்போவதாக ஒரு பெண் வாக்குமூலம் தருவாளேயாஞல் அவள் கணவனிடம் ஜீவனும்சம் பெற வழிஇல்லை என்று தீர்ப்பு ஆகுகிறதன் கருத்து என்ன?

—ஒரு லேடி வக்கீல்

இடமில்லை

கைகள், கால்கள், காதுகள், கண்கள் ஜதை ஜதையாக அமைந்துள்ள மானிடத்துக்கு நாக்கு ஒன்றேதான். காதலுக்கு வர்ணனை அவசியம். சொன்னதைச் சொல்லிக்கொண்டிருக்கிற கிளிக்கு புத்தியுடன் வேறு எதுவும் சொல்லத் தெரியாது. வாதத்தால் வருமானம் தேடுகிறவர்கள் வக்கீல்கள். சிந்தனையும் செயலும் ஒன்றுகூடுமிடத்தும், இல்லறம் நடாத்தும் சதி—பதிகளிடமும் அதிகப்பேச்சுக்கு இடமில்லை. பொன் நகைக்காக கூச்சலிடாது கணவனின் புன்னகையே பூஷணம் என்று மதிக்கிறவள் உத்தமி. —ஒரு டாக்டர்

துடுப்பு

துடுப்பின்றி சீட்டாட்டத்தில் ஜெயிக்க முடியாது. துடுப்பின்றி படகோட்ட முடியாது. காதலின் துடுப்பு கலியாணம். மனைவியை சௌகரியமாக வைத்திருப்பேன் என்று ஆணும், கணவனுக்கு கீழ்ப்படிதலாக இருப்பேன்என்று பெண்ணும் சத்தியம் செய்கிற சடங்குதான் கலியாணம். வாழ்க்கை என்ற படகில் ஆடவன் துடுப்புப் போடுகிறபோது இரைச்சலிடாதது பெண்மை. —ஒரு சென்னைவாசி

புகழ்

கலியாணம் என்பது ஒரு நாடக மேடை. தனக்குக் கிடைத்த பாத்திரத்தை அறிந்து உணர்ச்சியோடு நடித்தால் புகழ் உயரும்.

—ஒரு நடிகை

உலகப் போக்கு

பணத்தைப் பார்க்கிறவன் நேசத்தை நினைக்கமாட்டான். விவகாரத்தை முக்கியமாகக் கருதுகிறவன் செலவைக் கணக்கிடுவான், தன்

மகளின்மீது அன்புள்ளவன் மாப்பிள்ளையால் தனக்கு லாபம் உண்டா என்று எண்ணவே மாட்டான்.

—ஒரு வியாபாரி

சுக்கான்

காதல் என்பது நொடிப்பாதை, மனம்என்ற சுக்கானை நொடிகளுக்கு ஒதுக்கித் திருப்பி கலியாணம் என்ற (நேர்) பாதையில் செலுத்த வேண்டும்—தங்குதடங்கலிரா.

—ஒரு மோட்டார் டிரைவர்

ஜோடி

சண்டி மாடும் நொண்டி மாடும் நுகத்தில் ஒத்து உழைப்பதில்லை, சரியான ஜோடி மாடுகளை பழக்கிய பின்தான் வேலை செய்யும். முன் அறியாது காதலில் சேருகிறவர்கள் பின் அவஸ்தைப்படுகிறார்கள்.

—ஒரு கமலைக்காரன்

நஷ்டம்

கடன் வசூலாகாதபோது பணமும், சிநேகிதமும் நஷ்டமாகிவிடுகின்றன. காதலின் வெற்றி கலியாணமாக முடியாதபோது மதிப்பும்தொடர்பும்இழக்கப்படுகின்றன.

—ஒரு ஹோட்டல்காரர்

லாபம்

கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாகி, விடுபட முடியாமல் தவிக்கிறவன் கெடுதல்களை எடுத்துக் காட்டுவதில் நஷ்டமுமில்லை, அவன் சொல்லுகின்றவைகளைக் கவனியாது செயல்களை அலசிப் பார்ப்பதில் லாபமுமில்லை.

—மிஸ்டர் ஸ்மோகர்

சூன்யம்

சூரிய வெளிச்சம் படாத குப்பைகளில் புழுக்கள் நிறைய உற்பத்தியாகின்றன. இரகசியம் என்று மறைக்கிற இடங்களில் கவனம் அதிகமாகச் செல்லுகிறது. நம்பிக்கையின் போக்கு பலவிதமாக கற்பனைசெய்கிறது, அதனால் மார்க்கங்கள் அதிகரித்தே வரும்—கடைசியானமுடிவு சூன்யம்என்றசாந்தி.

—திருமதி சாந்தா

சிறப்பு

உயர்நிலைப் பள்ளிகளில் சிறப்புப் பாடங்களுக்கு மதிப்பில்லாத காலமிது! அதனால் கல்லூரிகளில் கற்பிப்பது கஷ்டமாக இருக்கிறது. ருசி வகைகள் ஹோட்டல்களில் கிடைக்கின்றன. சமையல் செய்வது கேவலம் என்று எண்ணுகிற காலம் இது! உப்பின்விலை குறைந்தால் அரிசி கிராக்கியாகிறது. கலியாணத்தின் சிறப்புக் குறைய காதலின் மதிப்பு அதிகரிக்கிறது. ஆகவே விவாகரத்தும், ஹோட்டல்களும் மிகுந்து வருகின்றன. பல ஹோட்டலில் சாப்பிடுகிறவர்களுக்கு வீட்டுச் சாப்பாடு பிடிக்காது.

—ஒரு கல்லூரி பிரின்ஸ்பால்

மனைவி

காற்றினால் தண்ணீர் இறைக்கிறது இயந்திரம். இயந்திரத்தைக் கண்டுபிடித்தவன் விஞ்ஞானி. காற்றுள்ளபோது தூற்றிக்கொள்வது புத்திசாலித்தனம். கணவனின் போக்கைக் கவனித்து அனுசரித்துநடந்து காரியத்தைச்சாதிக்கிறவள் மனைவி. இல்லையேல், அவள் வேலைக்காரியே!

—ஒரு மெக்கானிக்

மகிழ்ச்சி

தனி இதழ் அணா 4

ஆண்டுச் சந்தா ரூ. 3

(தபாலில்)

தேர்ந்த முத்துக்கள்

காலத்தின் நிலையை அறிந்துகொள். காலமே உன் உயிர். அதை வீணாக்குவது உன்னையே நீ கொலைசெய்து கொள்வது போலாகும்.

—ஜேம்ஸ் ஆலன்

அடிமையான சிங்கத்தைவிட, சுதந்திரமான பூனை எவ்வளவோ மேலானது.

—எஸ். சத்தியமூர்த்தி

மனம் செல்லும் வழியெல்லாம் செல்லாமல், அறிவு செலுத்தும் வழியில் செல்லுங்கள்.

—கி. ஆ. பெ. விசுவநாதம்

போர்க்களத்தில் தலைமை தாங்குவதைவிட வெற்றிக் குடையின்கீழ் தலைமை வகிப்பது மிகக் கடினம்.

—ரா. க. சண்முகம்

கே. கோவிந்தன், செ.க. பட்டி.

*　*　*　*

தவறு செய்வோரைத் தட்டிக் கொடுத்து தன் சொந்த நலனுக்கு வழிதேடிக்கொள்ளும் சுயநலப் போக்கினருக்கு ஒருபோதும் இடமளிக்கக்கூடாது என்று கூறும் வீரன்தான் இலட்சியவாதி.

—அறிஞர் அண்ணாதுரை

ஆணவம் அவநம்பிக்கை பெற்றெடுத்த அவமானச் சின்னம். தன்னம்பிக்கைவளரும்இந்தக்காலத்தில் அதை மதிக்கக்கூடாது.

—ஏ. வி. பி. ஆசைத்தம்பி

எஸ். ஏ. கப்பார், சென்னை-2

*　*　*　*

உலகமெல்லாம் கட்டியாளும் ஒரு அரசனாயிருப்பதைக்காட்டிலும், ஆண்மகனாகிய நீ ஓர் பெண்ணின் மேன்மையான அன்புநிறைந்த இதயத்தின்சக்கரவர்த்தியாக இருப்பது மேல்.

—இங்கர்சால்

அறிவு என்ற பொன்னை கடவுள் என்ற களிம்பு மூடி நிற்கிறது. அக் களிம்பைப் போக்கி பொன்னறிவு கொண்ட மனித வர்க்கம் அறிவுச் சுடர்வீசி ஆனந்தத்தில் மூழ்கும் நாள் என்நாளோ?

—கோவை அய்யாமுத்து

என். ஜே. கோபாலன், அரியலூர்.

*　*　*　*

குழந்தை உற்பத்தியைக் குறைத்தாலன்றி இந்நாட்டின் அபிவிருத்தியை எவ்வித முற்போக்கு திட்டங்களாலும் சரிக்கட்ட முடியாது.

—மகிழ்ச்சி சதானந்தம்

மதம் எப்பொழுதும் கலைகளுக்கும், ஆராய்ச்சிக்கும், அறிவிற்கும் எதிரியாக வந்தது, வருகிறது.

—இங்கர்சால்

கிறிஸ்டிமா தங்கராஜ், மதுரை

*　*　*　*

எதையும் வெட்டொன்று துண்டிரெண்டெனப் பேசு.

—பாரதிதாசன்

சந்நியாசி பற்றற்றவனல்ல; மோட்சத்தை அடைய வேண்டும்

என்ற ஆவல் கொண்டவன்.

—காந்திஜீ

மு. முத்துசாமி, ஆ. ஊர்.

* * * *

குடும்ப முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம். நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்.

—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

அதிகாரம் ஒரு பயங்கரமான தொத்து நோய்! அது யார்யாரை அண்டுகிறதோ, அவர்களையெல்லாம் கறைப்படுத்திவிடும். —ஷெல்லி

உலகில் இரண்டே குடும்பங்கள் தான்; ஒன்று பணக்காரர்களுடையது, மற்றொன்று ஏழைகளுடையது.

—செர்வான்டஸ்

ஒவ்வொரு புரட்சி என்கிற மலரும் முதலில், மக்கள் உள்ளத்தில், சிந்தனை என்கிற அரும்பாக இருந்ததுதான். —எமிலிஜோலா

புரட்சிப்பித்தன், மதுரை.

* * * *

குற்றத்தை மன்னித்துவிடலாம். ஆனால் துரோகத்தை மன்னிக்க முடியாது.

—ரூசோ

நான் கடவுள் வணக்கம் செய்வதில்லை.

—நேரு

ஜாதியை ஒழிக்கவேண்டுமானால் ஒவ்வொருவரும் கலப்புத்திருமணம் செய்துகொள்ள வேண்டும்.

—ராஜாஜி

சி. சிற்பி, தஞ்சை.

* * * *

சுயராஜ்யம் கோழைகளுக்கல்ல, சிரித்துக்கொண்டே தூக்குமேடையில் ஏறத் தயாராயிருக்கிறவர்களுக்குத்தான். காந்திஜீ

கொதிக்கும் மனமே மனிதனின் மிகப் பெரிய ஆயுதம்.

—மார்ஷல் ஃபோக்

சட்டத்தைப் பணக்காரன் செய்கிறான். சட்டம் ஏழைகளை ஆள்கிறது. —கோல்டுஸ்மித்

படிப்பு வேறு; வாழ்க்கை வேறு.

—ஜி. ஆர். தாமோதரன்

தான் ஒரு சிறந்த அறிவாளி என்று எண்ணுபவன் முட்டாள் மட்டுமல்ல, ஆபத்தானவனும்கூட.

—வால்டர்டைரர்

குமார், தூத்துக்குடி.

* * * *

பெரும்பாலும் நம் நாட்டவர்கள், உண்மை அறிவு ஆராய்ச்சிகள் உடைய பெரியோரைக் கொண்டாடுவது இல்லை. வெளி மினுக்கும், வெற்று ஆரவாரமும் உடையாரைப் பின்பற்றித் தம்நலனையும், தம்நாட்டவர்நலனையும்இழந்துவிடுகின்றனர்

—மறைமலையடிகள்

முட்டாள்களையும் பொய்யர்களையும் கடவுள் என்று கூறுவதைவிட கடவுளின் சிம்மாதனத்தைக் காலியாக வைத்திருப்பது நல்லது.

—பெர்னாட்ஷா

சமுதாயத்தின் வாழ்க்கையை மேலும் மேலும் வளமுள்ளதாக மாற்றி அமைப்பதற்காக மக்கள் ஒன்றாகத் திரளும் அமைப்புக்குத் தான் அரசாங்கம் என்று பெயர்

—பேராசிரியர் லாஸ்கி

வ. இலக்குவன், வேலூர்.

* * * *

பத்திரிகாசிரியர்கள் சமுதாயத்தின் போதனுசிரியர்கள். ஆயிரம் பட்டாளங்களைவிட எதிர்க்கட்சியைச் சேர்ந்த நான்கு பத்திரிகைகளைக் கண்டுதான் ஆட்சியாளர்கள் அதிகம் அஞ்சவேண்டும். பத்திரிகைகள் அவ்வளவு பலமுள்ளவை.

—நெப்போலியன்

விஞ்ஞானம் ஒளியைத் தருகிறது மூடநம்பிக்கை இருளைத் தருகிறது.

— இங்கர்சால்

பசியோடு கிடக்கும் பாட்டாளியிடம் சென்று பரமன் புகழ் பாடுவது பயனற்றது. வேதாந்தம் பேசுவது வீண். அவன் கேட்பது உணவு, உடை, இடம், வேதாந்த விசாரணை அல்ல.

—நேரு

S.இராமானுசம், குல்லலக்குண்டு.

* * * *

மன்னின் கையில் செங்கோல் இருக்கிறது, அவன் கை அசைந்தால் போர்வீரர்கள் என்னைப் பழிவாங்கவருவார்கள். மதகுரு கையில் சிலுவைஇருக்கிறது, அந்த சிலுவை அசைந்தால் அவன்முன் மண்டியிட்டுக் கிடக்கும் மக்கள் என்மீது பாய்ந்து வருவார்கள். எனினும் இருவரையும் நான் எதிர்க்கிறேன். ஏனெனில் இவைஇரண்டையும்விட பலமான பேனு என் கையிலிருக்கிறது.

—வால்டேர்

அடிமையின் அலங்கார மாட மாளிகையில் தலை வணங்கி வாழ்வதைவிட, இடிந்த பாழ் அடைந்த சுதந்திர இல்லத்தில் தலை நிமிர்ந்து வசிப்பதே சிறந்தது.

—மூர்

ஒருமனிதன் தன்னுடைய "சுதந்திரத்தைஇழந்துவிட்டான்என்ருல், அவன் தன்னுடைய "மனிதத் தன்மையை" இழந்துவிட்டான் என்றுதான் பொருள்.

—ரூசோ

பாசுநாதன், பண்மொழி.

* * * *

உன்னை மகிழ்விக்க சாப்பிடு. பிறரை மகிழ்விக்க ஆடை உடுத்து

—பிராங்ளீன்

சிரி, உலகம் உன்னேடு சேர்ந்து சிரிக்கும். அழு, உன்னேடு ஒருவரும் அழமாட்டார்கள்.

—எல்லாவிலர்

உலகில் நல்லவராக இருப்பவர்கள்பாடு ஆபத்து.

—பெர்ணுட்ஷா

தாயின் இருதயம்தான் குழந்தையின் பள்ளிக்கூடம்.

—ஹெய்ச். டபிள்யூ. பீச்சர்

அ. சோணை, மதுரை.

* * * *

பணக்காரர்களின் மாளிகைகளைவிட ஏழைகளின்குடிசைகளில்தான் அன்பு அதிகமாக இருக்கிறது.

—இங்கர்சால்

ஆடவர்கள் எவ்வளவுதான் கேவலமாகத் திரிந்தாலும் அதைக் காட்டிக்கொடுக்காத "இயற்கை" பெண் இனத்தைமட்டும்வஞ்சித்துவிட்டது

—மகிழ்ச்சி சதானந்தம்

கடவுளிடம் நம்பிக்கை இல்லாதவன் நாஸ்தீகன் அல்ல; தன்னிடம் நம்பிக்கை இல்லாதவனேநாஸ்தீகன்

—விவேகானந்தர்

இ. சையது முகமது உசேன், பண்மொழி.

★

கார்ட்டுக் கட்டுரைப் போட்டி 6 முடிவு

மகிழ்ச்சிக்கு எனது யோசனை!

நல்லகேள்வி. பொதுமக்களின் பல்வேறு எண்ணங்களையும் அறிந்து அதில் சிறந்தவற்றைச் சிந்தித்துப் பார்த்து மக்களுக்கு தொண்டுசெய்ய அரிய கேள்வி. நம்நாடு பலதுறைகளிலும் முன்னேறிவரும் இக்காலத்தில் முக்கியமாக பெண்கள் முன்னேற்றத்துக்காக மகிழ்ச்சி பாடுபட வேண்டும்என்பதே என் முக்கிய அவா! அர்த்தமற்ற பழைய புராணச் சடங்குகள் ஒழிய, வீரத் தமிழ்ச் செல்விகள் கற்பு நிலை தவறாது வாழச் செய்ய, மறுமணம், கலப்புமணம், பெண் கல்வி, முதியோர் கல்வி முதலியன பெருக்க, மக்களிடையே நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் உயிரோடுஒன்றெனக் கலக்கவும், வருங்கால செல்வர்களான மாணவ, மாணவிகள் தேசியவிவகாரங்களில் தலையிடாமல் பரந்த மனப்பான்மை, சிறந்தநோக்கம், தேசப்பற்று முதலிய அரிய குணங்களை உண்டாக்கவும், தொழிலின் சிறப்பை எடுத்துக்கூறி தொழிற்கல்வியின் முன்னேற்றத்துக்காகவும், அவ்வப்போது நிகழும் நாட்டின் நிலவரத்தைப்பற்றியும், பொதுமக்களின் உள்ளப் பண்புகளை கதை, கவிதை, கட்டுரை, கார்டுப்போட்டி முதலியவைகளின் மூலமாக அறிந்து அதற்குத் தகுந்தபடி சீர்திருத்தக் கருத்துக்களுடன் மாதம் இருமுறை மகிழ்ச்சி பொங்கும் வதனத்துடன் மகிழ்ச்சி தொண்டாற்ற வேண்டும் என்பதே என் ஆவலும்! மகிழ்ச்சியுடன் நான் கூறும் யோசனையுமாகும்.

கே. பாப்பாத்தி, பொய்யூர்.
(ரூ. 1 பரிசு பெற்றவர்)

* * * *

ஞா.சோ.போட்டியை விலக்கி அதற்குவைத்திருக்கும் ரூ. 10ஐ நல்ல கதை, கட்டுரை இவைகளுக்குக் கொடுக்கலாம். கதையோ, கட்டுரையோ அனுப்பும் போது மகிழ்ச்சியின் முகவரிக் கூப்பனுடன் அனுப்பும்படிசெய்யலாம். இளம் எழுத்தாளர்களைத்தவிர பெரிய எழுத்தாளர்களும் கலந்துகொள்ளச் செய்யும்படி செய்தல். ஒரு கதையின் அளவு 5 பக்கங்களாவது இருக்கலாம். கதைகள் மனோதத்துவம், துப்பறியும் கதையாகவு இருக்கலாம். தை மாத இதழில் நாட்குறிப்பு இட்டதுபோல் பிரதிமாதமும் மகிழ்ச்சியில் செய்லாம். இவைகளே நான் க நினைக்கும் யோசனை.

இளஞ்சோழன், மானுமதுரை

........'மகிழ்ச்சி'யில் வரும் கதைகள் காதலை மட்டும் தழுவி யிருத்தல்கூடாது; மேனாட்டினரைப்போல், யாத்திரை அனுபவங்கள், இயற்கை ஆராய்ச்சிகள், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். எச். ஜி. வெல்ஸின் 'சூட்சும மனிதன்' ஸ்டீவன்ஸனின் 'இரட்டை மனிதர்கள்' கேனல்டாயிலின் 'புள்ளி பட்டைகள்' போன்ற காவல் கதைகள் வரவேண்டும். பொதுவாக மகிழ்ச்சியின் கதைகள் புதுமை, புதுமை என்ற வெற்றி கீதம் பாடி முன்னேற வேண்டும்........

என். ஆர். ஆதிமூலம், ஈரோடு.

* * * *

.......ஏதாவது ஒரு கதையைக் குறைத்துக்கொண்டு அதற்குப் பதில் ஓர் சிறந்த நாடகம் (நாட்டின் கல்வி நிலை உயரக்கூடிய முறையில் அல்லது அறியாமையை அகற்றக்கூடியமுறையில்) பிரசுரித்தால் அதைப்பள்ளியில் பயின்றுவரும் பாலகர்களின் மூலம் மக்களுக்கு எடுத்துக் காட்ட பள்ளி ஆசிரியர்கள் தயங்க மாட்டார்கள். கல்விநிலை உயரலாம்........

மு. இராக்கப்பன், இடையன்குளம்

* * * *

மக்களின் மகிழ்ச்சிக்காக மகிழ்ச்சியை வாரமொருமுறையாக்கி, உள்ளம் வாடும் மக்களை உவகையடையச் செய்யுங்கள்.

கார்டு போட்டி 7

ஜாதி ஒழிப்பிற்கு எனது யோசனை!

கார்டின் ஒரேபக்கத்தில் தெளிவாக எழுதி 25—4—53க்குள் அனுப்புக. பரிசு ரூ. 1.

மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்.

பள்ளிப் படிப்பால் பரவசம் குன்றிவரும் பாலகர் கூட்டத்திற்கு ஒரு பகுதியை வாரம் தவறாது வெளியிடுங்கள். சிரிப்பொலிகள் என்று முன்பு வந்த பகுதியை மீண்டும்வெளியிட்டு மக்களை மகிழச் செய்யுங்கள். ஞாபக சோதனைப் போட்டியை பகுத்தறிவுப் போட்டியாக மாற்றுங்கள். பெண்களுக்கென ஒரு பகுதியை ஆரம்பியுங்கள்........

பி. சரோஜா, விருதுநகர்.

* * * *

.........மாதமிருமுறை வெளியிடப்பட வேண்டும். பக்கங்கள் குறைவாக இருந்தாலும் அடங்கியுள்ளவிடயங்கள் பொன்எழுத்துக்களால் பொறிக்கத்தக்கனவாயிருக்கவேண்டும். அறிஞர்களின் பொன்மொழிகள், நேயர்களின் விரும்பத்தக்க விருப்பங்கள், சீர்திருத்தக் கவிகள், ஞாபக சோதனைப் போட்டிகள் முதலியன மிகுதியாக வேண்டியன. இத்தகைய சீர்திருத்தங்கள் எங்கள் 'மகிழ்ச்சி'யிலே மிகுதியாகஇருந்

பெண்களுக்கு!

பெண்களுக்கென மூன்று பக்கங்கள்வரை ஒதுக்குவதென்று முடிவு செய்துள்ளோம். இப்பகுதியைப் பெண்களே பூர்த்தி செய்ய வேண்டும். கதை, கட்டுரை, சம்பாஷணை, ஓரங்கநாடகம், சமையற் குறிப்பு—இப்படி அவர்களதுசிந்தனைக்குகந்த விஷயங்கள் எதுவேண்டுமானாலும் எழுதியனுப்பலாம். ஆசிரியர் உசிதம்போல் தக்கசன்மானமும் வழங்கப்படும் ஆசிரியர்.

தாலும் இன்னும் பெருக வேண்டுமென்பதே எங்கள் அவா.

எஸ். எம். இப்ராகிம், மதுரை.

* * * *

...சமுதாயத்தின் படப் பிடிப்பான சிறுகதைகள் சதிராடுதல் சாலச் சிறந்தது. உலக சிறுகதை மேதைகளின் சிறந்த சிறுகதைகளை—முடிந்த வரையில் மொழிபெயர்த்துவெளியிடலாம்.

எஸ். எத்திராசன், வேலூர்.

* * * *

...வைதீகப் பித்தர்களைச் 'சீர்திருத்தச் செம்மல்களாக' மாற்றும் முறையில் நம் மகிழ்ச்சி வாரமொருமுறைவரல்வேண்டும். மாற்றுக்கட்சித் தோழர்கள், மடமையிலிருந்துவிடுபட்டுக் கடமை புரியக் காத்திருக்கும் 'கற்றவர்கள்' உழைப்பிலேஉயர்வுகாணும் ஏழை எளியவர்கள் இவர்கள் அனைவரும் தங்கள் கவலைகளை மறந்து களிப்பெய்தும்முறையில் 'மகிழ்ச்சி' வரவேண்டும்.

T. N. சம்பையான், கருவூர்.

* * * *

மகிழ்ச்சி கடந்தகாலக் கன்னி நிகழ்காலத்தின் மனைவி. வருங்காலத்தின் தாய். மார்க்கட்டின் மலிவுரகச் சரக்கல்ல. சேமிப்புக்கும்உட்பட்டதல்ல மகிழ்ச்சி. தேவையினால் ஏற்பட்ட காரிய சாதனையின் வெற்றிப் பிரதிபலிப்பில் காணும் இனிமையும் உணர்ச்சி வெறியும் கலந்த ஒளி வீச்சுத்தான் மகிழ்ச்சி. ...சங்ககாலஇலக்கியப்பகுதி, கட்டுரைப் பகுதி, கவிதைப் பகுதி, கைத்தொழில் பகுதி, வரலாற்றுப் பகுதி இப்படிப் பலவாறாகத் திகழல் வேண்டும்.......

K. P. பால்வண்ணம், நெல்லை.

மாணவர்க்கு!

திருக்குறள் விளக்கக்கதைகள்

பள்ளி மாணவ மாணவிகளின் இளம் உள்ளங்களைப் பண்படுத்தும் வகையில் நீங்கள் விரும்பிய குறள் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதற்குகந்த கதை ஒன்று சீர்திருத்த முறையில் உருவாக்கி அனுப்புக. கதை இரண்டு பக்கங்களுக்குள் முடிய வேண்டும். இவை மாதாமாதம் மாணவர் பகுதியில் வெளியிடப்படும். தக்க சன்மானமும் உண்டு. [ஆர்.

சித்திரை

திரைப்பட விமர்சனம்

குமாஸ்தா

இளந்தத்தன்—மதுரை

கதை: இப்படத்தின் கதாசிரியராகிய ஆசார்ய ஆத்ரேயா, வறுமை தலைமை தாங்கும் ஒரு குமாஸ்தாவின் குடும்ப நிலைமையை—சமுதாய இயல்பை நன்கு படம்பிடித்துக் காட்டும்வண்ணம் தமது கதையை சுவை குன்றாது எழுதியிருக்கிறார். கதையில் உணர்ச்சிமிக்கநிகழ்ச்சியும், நல்ல விறுவிறுப்பும் இடம் பெற்றிருக்கின்றன.

வசனம்: ஏ.டி.கிருஷ்ணசாமியின் வசனம் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமாக போற்றத்தக்க முறையில் விளங்குகிறது! வசனத்தில் நகைச்சுவையும், உயரிய கருத்தும் கலந்திருப்பது குறிப்பிடத்தக்கது! இவ்வசன ஆசிரியர், சீர்கெட்ட சமுதாயத்தைச் சாடுகிறார்—திருந்தும் வழியையும் தெரிவிக்கிறார். வசனத்தில்வரும் தேவைக்கு அதிகமான ஆங்கிலச் சொற்களை நீக்கியிருந்தால் வசனம் இன்னும் நன்றாய் இருந்திருக்கும்!

பாடல்கள்: மருதகாசி பாடல்களை இயற்றியிருக்கிறார். சில பாடல்களில் ஆழ்ந்த கருத்துக்கள் கலந்திருக்கின்றன! குறிப்பாக, "தவறுகள் அதிகம் செய்வோம்! தலைவிதியென நாம் கொள்வோம்! சொல்லும் தைரியம் இழந்து வீணே நாம் சமூக அடிமைகளாவோம்!" என்ற தொடர் சிந்திக்கத்தக்க சிறந்த கருத்தாகும்! பாடல்கள் நாமெல்லோரும்பாடும்படியாக-மனதைக் கவரும்முறையில் இல்லை! "இன்பமோ! துன்பமோ!" என்று தொடங்கும் பாடல் சிறிது இனிமை பெற்றிருக்கிறது!

நடிப்பு: பல ஆண்டுகளாக பலபடங்களிலே நடித்து நற்புகழ் பெற்றுள்ள நாகையா, இப்படத்தில் குமாஸ்தாவாக (வழக்கம்போல்) இயற்கையாக நடிக்கி

ளூர். மனோஹர் துடிப்போடு பேசுகிருர். இவருடைய நடிப்பில் நல்ல முன்னேற்றம் தென்படுகிறது. நரசிம்மபாரதி சிறிது நேரம் தோன்றினுலும் கச்சிதமாக நடிக்கிருர். அவரது நண்பனுக வரும் ப்ரண்ட் ராமசாமி வசனத்தைப் பொரிந்து தள்ளுகிருர்—சக்கைப்போடு போடுகிருர். அதாவது, பட ஆரம்பமுதல் இறுதிவரை நகைச்சுவை ததும்ப நன்கு நடிக்கிருர்!

குமாஸ்தாவின் மனைவியாக வரும்ஜெயம்மா, குடும்பத்தொல்லையை பொறுமையோடு தாங்கி, குறைகூற இயலாத முறையில் தன் பாகத்தையுணர்ந்து நடிக்கிருர். குமாஸ்தாவின் தங்கையாக—வருத்தத்தின் வடிவமாக வரும் பண்டரிபாய், அளிக்கப்பட்ட பாகத்திற்கேற்ப பாராட்டத்தக்க முறையில் நடிக்கிருர். 'தாயார்' பாகத்திலும் தன்னுல் நன்கு நடிக்கமுடியும் என்பதை மெய்ப்பிக்கிருர். தான் 'கற்பு' தவறியவளல்ல என்று மாமன்—மாமியரிடம் முறையிடும் கட்டத்தில் இவருடைய நடிப்பு உயர்ந்த முறையில் விளங்குகிறது! மற்ற நடிகர்களின் நடிப்பு பரவாயில்லை!

பொதுவாக: பழங்காலத்துப் படத்தைப்போல் தெய்வ (?) வணக்கத்துடன் படம் தொடங்குகிறது! ஒலிப்பதிவு பலஇடங்களில் நன்கு அமையவில்லை! ஒளிப் பதிவில் குறையில்லை. பழைய மாணவர்கள் சங்கத்தின் தங்க விழா நாட்டியம் படத்திலுள்ள விறுவிறுப்பைக் கெடுக்கிறது. மணவிழாவில் மணமக்களைக் கிண்டல் செய்து பாடும் கட்டம் ஏற்கனவே, 'திகம்பர சாமியார்'படத்தில் வந்ததுதான்! இப்படத்திலுள்ள நகைச் சுவை சிலபடங்களைப்போல் கதைக்குப் புறம்பாகச் செல்லாது கதையுடன் ஒட்டிவருவது போற்றத்தக்கது! விறுவிறுப்புக்கொண்ட கதையமைப்பும், உயரியநடிப்பும் படத்திற்கு வெற்றி அளிக்கின்றன! படத்தின் முன்பகுதியை விட பின்பகுதி நன்கு சோபிக்கின்றது.

குடும்ப நிகழ்ச்சியைச் சிறந்த முறையில் சித்தரித்துக் காட்டும் "குமாஸ்தா" அனைவரும் குடும்பத்துடன் ஒருமுறை பார்க்கத் தக்க படமே!

[சமீபத்தில் வெளிவரும் படங்களின் சிறந்தவிமர்சனங்களை நேயர்களிடமிருந்து எதிர்பார்க்கிருேம்.]

இலங்கை பூராவிற்கும் 'மகிழ்ச்சி' சோல் ஏஜண்டாக நாங்கள் ஏற்றிருக்கிறபடியால் இலங்கையில் சப் ஏஜன்ஸி எடுக்க விரும்புவோர் எங்களுக்கு எழுத வேண்டுகிறேம்.

தி. தம்பித்துரை,
நியூஸ் ஏஜண்ட்,
நெ. 226, ஆஸ்பத்திரி ரோடு,
யாழ்ப்பாணம். (சிலோன்)

ஞாபக சோதனைப் போட்டி 13

[கட்டணம் கிடையாது] முடிவு தேதி: 30—4—53

சரியான விடைக்கு
பரிசு ரூ. 10

ஒன்றுக்கு மேற்பட்டவர் சரியான விடை எழுதி அனுப்பினால் பரிசுத் தொகை சமமாகப் பிரித்துக்கொடுக்கப்படும்

வெற்றி பெற்றவர்கள் ஜாபிதாவும் சரியான விடையும் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்

1	— ந் —
2	மா — — —
3	— — — திரி
4	கிருஷ்ண — — —
5	— — ட் — — ப் — ள் —
6	— ழை — — ம் — —
7	— — — மோகினி
8	— — ப —
9	ரா — — — தி
10	ம — — ர — —

பெயர்..

விலாசம்...

ஊர்.............................. ஜில்லா.................................

போட்டி நிபந்தனைகள்

1 கட்டத்திலுள்ள கோடிட்ட இடங்களைப் பூர்த்திசெய்தால், இதுவரை வெளிவந்துள்ள **தமிழ்ப்** படங்களின் பெயர்கள் வரும்.

2 **முதல் கூப்பன்** அச்சுக் கூப்பனிலும், அதன்பின் தனித் தாளிலும் தேவையானவை ஒருவர் எழுதியனுப்பலாம். ஆனால் **100 கூப்பன்களுக்கு ஒரு அச்சுக்கூப்பன்வீதம் எழுதப்படவேண்டும்.**

3 எவருமே சரியானவிடை அனுப்பாவிடில், போட்டி ஆசிரியரின் தீர்ப்புப்படி பரிசுத் தொகை பிரித்துக்கொடுக்கப்படும்.

4 **30–4–53**க்குப்பின் வரும் கூப்பன்கள் நிராகரிக்கப்படும்.

5 உள்ளூர் வாசிகள் நேரில் கொண்டுவந்து கொடுக்கலாம்.

கூப்பன்கள் அனுப்பவேண்டிய விலாசம்:

ஆசிரியர், ஞாபக சோதனைப் போட்டி, மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்.

ஞாபக சோதனைப் போட்டி 12 முடிவு

சரியான விடை

1 மணிமேகலை
2 சீதாபஹரணம்
3 பூங்கோதை
4 மிருச்சகடிகா
5 சந்திரஹரி
6 கிருஷ்ண நாரதி
7 சத்தியசீலன்
8 ஸ்ரீவள்ளி
9 உத்தமபுத்திரன்
10 பக்த கபீர்தாஸ்

எவருமே சரியான விடை அனுப்பாததால் கீழ்க்கண்டபடி பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது.

முதற் பரிசு (2 தப்புள்ள விடை) ரூ. 4

U. ராஜகோபாலன், மஞ்சக்கொல்லை. நாகபட்டினம் P. O.

2வது பரிசு (3 தப்புள்ள விடை) ரூ. 3

N. J. ரத்தினம், 8/3, சாயக்காரர் தெரு, விருதுநகர்.

3வது பரிசு (4 தப்புள்ள விடை)
(தலைக்கு 8 அணு விலையுள்ள புத்தகங்கள்)

1 K. கோவிந்தன், செல்லணக்கவுண்டன்பட்டி.
அலங்காநல்லூர் P. O.—மதுரை ஜில்லா

2 S. ராமலிங்கம், Thungavi P. O.
உடுமலைப்பேட்டை Tk.—கோவை ஜில்லா

3 ப. சோமசுந்தரம், 39, அய்யனுநாயக்கர் முடுக்கு,
தூத்துக்குடி.

4 S. மாரியப்பன், வெற்றிலை பாக்குக் கடை,
கீழக்கடைத் தெரு, விருதுநகர்.

5 K. ரத்தினசாமி, 1, கான்பாளையம் 5, மதுரை.

6 S. L. அய்யனு, ஆஸ்பத்திரி தெரு,
வல்லம் போஸ்ட், தஞ்சை.

சந்தேகம் ஒழிக!

"ஜாலி"

[ஒருவர் 2 கேள்விகளே கேட்கலாம்]

தமிழரங்கன், ராஜகெம்பீரம்

அறிவு வளர்ச்சியுள்ள தாழ்த்தப்பட்ட தோழர்களுடன் பழகுவதைப் பல சமூகப்பித்தர்கள் மறைமுகமாக பலவாறு இழிவாகப் பேசுவதோடு பல இடையூறுகளும் செய்துவருகிறார்கள். அவர்களை என்ன செய்வது?

அவர்களின் கூற்று காலப்போக்கில் கரைந்துவிடும். அறிஞர்களின் தீண்டாமைஒழிப்புக் கொள்கைகளை அவர்கள் காதில் விழும்படி ஓதுங்கள். ஆணவக்காரர்களுக்கு சரித்திரம் தந்த பதில்களையும் அறிவியுங்கள்.

M. S. சின்னுசாமி, திருப்பூர்.

பணம் மிகுந்த பால்ய விதவை ஒருத்தி; கட்டழகிருந்தும் கஞ்சியில்லாமல் கஷ்டப்படும் கன்னி மற்றொருத்தி; இருவரும் என்னை நேசிக்கிறார்கள். நான் யாரை மணப்பது?

தயவுசெய்து பால்ய விதவையை மணந்துகொள்ளுங்கள். 'மகிழ்ச்சி'யில் என் கேள்வியும் வந்தது என்றில்லாது உண்மையில் செய்துகாட்டி, தம்பதிகளின் புகைப்படத்தை அனுப்பிவையுங்கள். நாங்கள் இனமாக வெளியிடுகிறோம்.

திரைப்படங்களில் நடிக்கவிரும்புகிறவர்கள், 5 ரூபாயும், போட்டோவும் அனுப்பினால் அறிமுகம் செய்வதாக எழுதி இருக்கிறீர்களே, நாங்கள் பிளாக் செய்து அனுப்பினால் பணம் அனுப்ப வேண்டுமா?

'மகிழ்ச்சி' நிபந்தனைப்படியே படமும் பணமும் அனுப்பவேண்டும்.

இ. மா. பாண்டியன், இராயகிரி.

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது அறிவா? அன்பா?

இரண்டும்தான்!

மனிதன் நிலைமையை மறந்து மிருகமாகிறான். அறிவு தடுமாறும்பொழுதா? அல்லது சிந்தனையை இழந்தபோழ்தா?

சிந்தனையை இழந்தபொழுது.

R. A. சமத், ஆத்தூர்.

திருமணம் செய்துகொள்ளப் போகும் வாலிபன் முன் தெரிந்து கொள்ள வேண்டியவை எவை?

தனது பொருளாதாரம் குடும்ப பாரத்தை ஏற்கச் சரிக்கட்டிவருமா என்பதை முதலில் கவனித்துக் கொள்ள வேண்டும். இரண்டாவதாக தனது நிலைக்கேற்ப பெண்ணைத் தேடவேண்டும்.

திருமணம் என்பதின் பொருள் என்ன?

ஆண், பெண் இருவரின் மனச் சேர்க்கையை ஏற்று, வாழ்க்கைப் படகைச் செலுத்த உறுதிப் படுத்துவது திருமணம்.

எஸ். பி. நாபன், கோத்தன்குளம்.

பாரதியைக் கனல் என்றும், பாரதிதாசனைப் பொறி என்றும் சொல்வது பொருத்தமா அல்லது பாரதியைப் பொறி என்றும், பாரதிதாசனைக் கனல் என்றும் சொல்வது பொருத்தமா?

கனல்தான் முந்தியது, பொறி அதிலிருந்து உண்டாவதே. எனவே முதலில் கூறியதே சரி.

'மகிழ்ச்சி' யை மாதம் இருமுறையாக்கினால் என்ன?

முயற்சி செய்துகொண்டிருக்கிறோம்.

இரா. செல்லத்துரை, மதுரை.

சீர்திருத்தத்தைஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள் யார்?

சிந்தனையற்றவர்கள்.

உதவியை பனைத்துணையாக மதிப்பவர் யார்?

நேர்மையாளர்கள்.

கே. கோவிந்தன், செ. க. பட்டி.

முன்பு புராணப்படங்கள் சுமார் 20 வாரம்கூட ஓடும். ஆனால் இந்த நவநாகரீக காலத்தில் சீர்திருத்தப் படங்களும், மற்றபடங்களும் சீக்கிரம் கிளம்பிவிடுவதேன்?

சீர்திருத்தமானாலும் ஆபாசப் படங்களை மக்கள்வெறுக்கும் அளவு பகுத்தறியும் சக்தி வளர்ந்துள்ளது. முன்பு ஆர்ப்பாட்டமாக ஓடிய புராணப் படங்கள் இப்பொழுது தேடுவாரற்றுப்போயிற்றே!

S. R. சந்திரன், மருங்குளம்.

அன்றொரு நாள் நான் ஒரு இளம்நங்கையொடு மாசற்ற அன்போடு பேசியதற்கு இன்றுவரை இந்தச் சாக்கடைச் சமுதாயம் காதல்என்று கற்பனைப் பெயரிட்டு களங்கம் விளைவிக்கிறதே ஏன்? இந்த அநீதி எப்போது நீங்கும்?

வெளுத்ததெல்லாம் பால், மின்னுவதெல்லாம் பொன்என்று குருட்டுத்தனமாக எண்ணுகிறபடியால் தான். தாங்கள் ஒருநங்கையையும், அந்த இளநங்கை ஒரு நாயகனையும் அடைந்துவிட்டால் பேச்சு மறைந்துவிடும்.

நாகரீகத்தின் உச்சியில் இருக்கும் மாதர்கள் ஆண்களின் உடையை அணிவதன் அர்த்தம் என்ன?

அதுதான் நாகரீகத்தின் உச்சியாக இருக்கலாம்!

ஆர். ராமசாமி, புதுஆயக்குடி.

ஒரு வாலிபன் மனப்பூர்வமாக ஒருபெண்ணைக் காதலித்துவிட்டு இடையில் எங்கோ மறைந்துவிட்டால் அப்பெண்ணின் கதிஎன்ன?

ஆழம் தெரியாமல் காலை விட்டதின் பலனாக, அடுத்து ஒருவனை மாலையிட வேண்டியதுதான்.

காதலித்துக் கல்யாணம் செய்துகொண்ட தம்பதிகளை வாழவிடாது தடுக்க நினைக்கும் துரோகியின் சபதம் நடக்கக்கூடியதா?

தம்பதிகளிடையேசந்தேகச்சுழல் கிளம்பாதிருந்தால், எதுவரினும் தாங்கும் சக்தி இருந்தால், அவர்களை வாழவிடாது தடுக்கமுடியாது.

N. பெருமாள், பம்பாய்-16.

தினப் பத்திரிகைகளில் ''நேயர் தபால்'' என்ற பகுதி போடுவது வாசகர்களுக்காகவா? அல்லது அரசாங்கத்தினர் கவனத்திற்காகவா?

குறைகளை இரு சாராரும் அறிந்துகொள்வதற்கே.

எனக்கு வயது 20. உதவிக்கு ஆள் இல்லை. கல்யாணம் 22 வயதுக்குமேல் செய்வதே நல்லது என்று பத்திரிகையில் பார்த்தேன் இதற்கு என்ன செய்வது?

உடற்கூற்று இடம் கொடுத்தால் உடனே விவாகம் செய்துகொள்ளுங்கள். சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி நடந்துகொள்வதில் தப்பில்லை.

டி. செல்வரத்தினம், தூத்துக்குடி

வேலைக்காரி படத்தை ஹிந்தியில் 'டப்' செய்து வடநாட்டிற்கு அனுப்பினால், அவர்களின் போலியான மதபக்தி ஒழிந்து மனிதாபிமானம் உண்டாகுமா?

சகலமும் கற்றுணர்ந்த இந்திய ஜனாதிபதி ராஜன்பாபுவே மூடப் பழக்கங்களுக்கு அடிமையாக இருக்கும்போது, பாமர மக்களை அவ்வளவு எளிதில் மாற்றிவிடமுடியாது.

சி. பொன்னுசாமி, பண்ணுருட்டி.

காதலின் முடிவு சாதலா? வாழ்தலா?

காதல் கல்யாணத்தில்முடிந்தால் இன்பகரமான வாழ்க்கை. இல்லை என்றால் ஏமாற்றம். சாவு என்பது கோழையின் செயல்.

M. S. பொன்னுசாமி, திருப்பூர்.

பதவிக்கு வருமுன் அன்பும், ஆசையும் காட்டுபவர்கள், பதவி கிடைத்த பின் முட்டாள்களாய் விடுகிறார்களே ஏன்?

பதவி என்ற மயக்க வஸ்து மனதைப் பாழ்படுத்திவிடுவதனால் இருக்கலாம்.

தற்போது ஆயிரக் கணக்கில் பகுத்தறிவுப் போட்டிகள் என்று பணத்தைப் பறிக்கிறதே அதை அரசாங்கம் ஏன் கவனிப்பதில்லை.

அரசாங்கத்தின் அனுமதி பெற்றுத்தான், சட்டத்திற்கு உட்பட்டு நடைபெறுகிறது.

ஆ. துரை, பாலமேடு.

பெண்கள் பேய் ஆடுகிறார்களே, ஆடும்போது பேயின்பெயரையும், ஊரையும் சொல்வதின் மர்மம் என்ன?

மர்மம் ஒன்றுமில்லை, சாதாரண நாட்களில் கேள்விப்பட்டவைகளை பீதியுடன் மனதில்கொண்டு, அதை மேலும் மேலும் அடக்க முடியாத நிலையில் ஆட்டத்தில் புலம்ப ஆரம்பித்துவிடுகிறார்கள் கோழை உள்ளத்தினர்.

கட்டபொம்மன் சரித்திரம்பற்றி உங்கள் கருத்தென்ன?

வெள்ளையருக்கு எதிராக தென்னாட்டில் முதன்முதலில் சுதந்திரப் போரை நிகழ்த்திய தமிழ்வீரனின் வரலாறுதான் கட்டபொம்மன் சரித்திரம்.

ராமசாமி, சித்தாலம்புத்தூர்.

சிக்கனத்தின் முதற்படி எது? செலவின் முதற்படி எது?

சிக்கனத்தின் முதற்படி சந்நியாசம். செலவின் முதற்படி சம்சாரம்.

சுப்பிரமணியன், போத்தனூர்.

ஆடாத மயில், பாடாத குயில், ஓடாத கடிகாரம். இதை யாருடைய வாழ்க்கைக்கு ஒப்பிடலாம்?

உழைத்தும் தகுந்த ஊதியம் பெறாத ஊழியர்களுக்கு.

★

செந்தமிழ் நாட்டுச் சிறுவர்களுக்கு
திடகாத்திரமளிக்கும்

சிறந்த உணவு எங்கள்

ராஜா பார்லி பிஸ்கட்
ராஜா குளூகோ பிஸ்கட்
ராஜா ஜிஞ்சர்நட் பிஸ்கட்

ஸ்தாபிதம்: 1926

ராஜா பிஸ்கட் கம்பெனி,

115, திண்டுக்கல் ரோடு, மதுரை.

உரிமையாளர்: ஆ. சங்குபிள்ளை.

கிளை: 2, டவுன்ஹால் ரோடு, காலேஜ் ஹவுஸ்,
L. V. ஷண்முகம் பிள்ளை, மதுரை.

விருதுநகர் கிளை ஏஜண்ட்:
A. ராமகிருஷ்ணன் 7/321, தெப்பம் மேல்பஜார்.

"மகிழ்ச்சி"

ஆண்டுச்சந்தா (தபாலில்)	ரூ.	3—0—0
தனி இதழ்	ரூ.	0—4—0

விளம்பர விகிதம் ஒரு தடவைக்கு

முன் அட்டை	மூன்று கலர்	ரூ.	150
அட்டை பின்பக்கம்	இரண்டு கலர்	...	100
அட்டை உள் 2வது பக்கம்	இரண்டு கலர்	...	75
,, உள் 3வது பக்கம்	,,	...	50
உள் ஒரு பக்கம் ஒரு கலர்		...	25
,, ½ ,, ,,		...	15
,, ¼ ,, ,,		...	10

நீண்ட நாள் விளம்பரங்களுக்கும், மற்ற விபரங்களுக்கும் எழுதவும். விளம்பரம் சேகரித்து அனுப்புகிறவர்களுக்கு கமிஷன் உண்டு.

மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்.

Regd. No. M. 5483. MAHILCHI April-May '53.

தலைவர் காமராஜ்	ரூ	1—8—0

மகிழ்ச்சி சதானந்தம் எழுதியவை.

விதியா? (2ம் பதிப்பு)	0—8—0
மனப்புயல்	0—8—0
15 நிமிடங்கள்	0—4—0
"சபலம்" (ஜீவா எழுதியது)	0-12—0

ஆ. கந்தசாமி எழுதிய

காமமும் காதலும்	0—8—0

வியாபாரிகளுக்கு 25% கழிவு உண்டு.
V. P. P. கிடையாது.

தனிப் புத்தகம் வேண்டுவோர் தபால் செலவுக்கு 0—0—9 சேர்த்து அனுப்பவும்.

விபரங்களுக்கு
மகிழ்ச்சி இல்லம். விருதுநகர்.

ஆசிரியரும், அச்சிட்டு வெளியிடுபவரும் நா. சதானந்தம்,
சதானந்தா அச்சகம்-மகிழ்ச்சி இல்லம்-விருதுநகர்